பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2017



## உருவிலில்லை உயர்வு!

ராம்க்ருஷ்

## நினைவுகள்

ஃபாத்திமா

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

ஆகஸ்ட் 2017

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
“காகிதம்” மனோபாரதி
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
“நம் குடும்பம்” ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
“பைந்தமிழரசு” பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

**எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...**

TAMILNENJAM
59, rue des Entrechats
95800 Cergy - France

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

## புதிய வெளியீடு...




பர்ஹாத் வெளியீட்டகம்,
14A, பர்ஹானா மன்ஸில்,
பாலமுனை- 03. 32354. இலங்கை

email : farookpalamunai@gmail.com

# அவனும் நானும்...

சிறிது தூர
பயணத்திற்குப்பின்
நானவனைச் சந்தித்திருக்கலாம்.
என் பயணத்தை
அவனும்
அவன் பயணத்தை
நானும்
சார்ந்தவர்கள் அல்ல.

என் குறித்த பயணத்தில்
அவன்
சம்மதமின்றி உடன்
வந்து கொண்டிருக்கிறான்.
அவனுக்கது
தெரியாதது போலவே
அவன் பயணத்தில்
நான் செல்வதும்
செல்லாமலிருப்பதும்
எனக்குத்தெரியாது.

என் பயணம்
நிறைவு குறித்த சேதி
என்னில்
விழத் தெடங்கிய தருணம்
விலகியிருந்தவன்
மீண்டும்
என் பார்வையில்
விழத் தொடங்கினான்.

அவன் பார்வையில்
நான் விழுந்தாலும்
அவனில் என்னைக் குறித்த
நினைப்பையும்,
அவன் பயணம் நிறைவு குறித்த
சேதியையும்,
அவனிடம்தான்
நீங்கள் கேட்டறிய வேண்டும்.

- பாரியன்பன்

# கரைந்தழும் கடல்

படகு
கரை தட்டிவிட்டது
உடைந்தும் உடையாமலும்

ஒருவேளை முழுதும்
உடைந்திருந்தால்
காணமல் போன கப்பலாய்
மூழ்கியிருக்கக்கூடும்

பின்னாளில்
மீன்கள் தங்கி மகிழும்
இனப்பெருக்கத்திற்கான
பவளப்பாறைகளாகவும்
ஆகியிருக்கக்கூடும்

ஒதுங்கிய இப்படகில்
மழை பெய்து போகிறது
வெயில் சாய்த்து செல்கிறது

பறவைகள் இளைப்பாறி
முத்தமிட்டும் எச்சமிட்டும்
செல்கின்றன

ஒட்டி அமர்ந்து
நெடுநேரம் கதைக்கும் காதலர்களின்
உறைவிடமாகவும் இருக்கிறது

இந்தப் படகுக்கு
எதிரில்தான்
கரைந்து அழுதுகொண்டிருக்கிறது
அதோ! அந்தக் கடல்....

கரைதட்டிய படகையும்,
ஓட்டிய மீனவனையும்
உதவியான துடுப்பையும்
கரைக்குத் திருப்பவில்லையென!

- பெண்ணியம் செல்வக்குமாரி



# உலகில் என்னைப்போல் யாருமில்லை..

**நீ மாற்றுத்திறனாளி அல்ல; பலரை மாற்றும் திறனாளி**
-டாக்டர்.ஏபிஜே. அப்துல்கலாம்

## கோவை **ஜெகதீஷ்**-ன் நேர்காணல்

நேர்காணல் **ஆ.வர்க்கீஸ்**

நியூயார்க் நகரத்தின் மான்ஹாட்டன் பகுதியையும், லாங் ஐலேண்ட் ப்ரூக்ளின் பகுதியையும் இணைக்கும் 5989 அடி நீளமுள்ள ப்ரூக்ளின் பாலத்தைக் கட்டியவர் வாசிங்டன் ரோப்ளிங். இந்தப் பாலத்தைக் கட்டும் முயற்சியில் அவர் இழந்தவை பல. பாலம் கட்டும்போது ஏற்பட்ட விபத்தில் தன் தந்தையை இழந்தார். சில மாதங்களில் தானும் பாலத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கிக் கொண்டார். தீவிர சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பிய அவரால் பேசவோ, நடக்கவோ முடியாது. உடலில் ஒரு விரலைத் தவிர வேறெந்த பாகத்தையும் அசைக்கக் கூட முடியாது. இந்த நிலையில் இருக்கும் யாருக்கும் மரணம் சீக்கிரம் தன்னிடம் கருணை காட்டாதா? என்றே தோன்றும். ஆனால் தன் ஒரு விரல் அசைவைக் கொண்டே அந்தப் பாலத்தின் கட்டுமானத்தை வடிவமைத்து 7 ஆண்டுகளில் அதைக் கட்டி முடித்தார் வாசிங்டன் ரோப்ளிங். இன்றும் அந்தப் பாலம் அவர் பெயர் விளங்க மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றது.



இப்படிப்பட்ட அசாத்திய மன உறுதி, விடா முயற்சி சாத்தியமா? என்று பலவேளைகளில் நாம் சிந்தித்ததுண்டு. இப்படிப்பட்ட யாரையா வது வாழ்நாளில் சந்திப்போமா? என்று கூட எண்ணியதுண்டு. ஆனால், இது இவ்வளவு சீக்கிரம் சாத்தியப்படுமென்று நான் கனவிலும் நினைத்ததில்லை.

ஆம், தனது இடது கையின் ஆட்காட்டி விரலை மட்டுமே அசைத்து, உலகத்தின் எட்டுத் திக்கும் தனக்கென நண்பர்களைச் சேர்த்துக் கொண்டுள்ளவர். பல்வேறு சமூக அறக்கட்டளைகளையும் ஒருங்கிணைத்து சமூக விழிப்புணர்வுப் பணிகளோடு, குழந்தைகள் மேம்பாடு, மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைப் போராட்டம், ஈழத் தமிழர்களுக்கான போராட்டம், பசுமை வளர்ப்பு, கண்தான இயக்கம் என இவர் கால் பதிக்காத மன்னிக்கவும் விரல் அசைக்காத களங்களே இல்லை எனலாம்.



தமிழ் இனி மெல்லச் சாகும் எனும் பாரதியின் கூற்றைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளோர் மத்தியில் மெல்லத் தமிழ் இனி வளரும் என்று தன்னம்பிக்கையோடு சொல்லுகிறவர் தான் கோவை, காட்டூரில் வசிக்கும் ஜெகதீஸ்.

இவரைப் பற்றித் தம்பி கவி இளவல் தமிழ் கூறவும், உடனடியாக அவரைச் சந்திக்க முற்பட்டோம். ஆனால் பல்வேறு இடையூறுகள். மீண்டும் முயன்று அவரைச் சந்தித்தோம். நமக்காகக் காத்திருந்த அவரிடம் நம்மை அழைத்துச் சென்றார் அவரது பாட்டி சுப்புலட்சுமி.

படுத்திருந்த ஜகதீஷ் "வாங்கண்ணே" என்ற தன் பாசமிகு குரலால் நம்மை வரவேற்றார். பார்த்ததும் இவரா இவ்வளவு செய்கிறார்? என ஆச்சரியத்துக்குள்ளானோம்.

அண்ணே எப்படி இருக்கிறீங்க? என்று நம்மை நலம் விசாரித்தார். "பாட்டி" என்று கூப்பிட்டார். அவர் வந்து ஜெகதீசை நம்மைப் பார்த்துப் பேசும்விதமாகச் சற்றுப் புரட்டிப் படுக்க வைத்தார். "தம்பி உன்னைப் பற்றிச் சொல்" என்றதும், "நான் பிறந்தது முதல் தவழும் பருவம் வரை நன்றாகத்தான் இருந்தேன். எழுந்து நடக்க முடியவில்லை என்பதற்காக ஒரு மருத்துவமனையில் பெற்றோர் சேர்த்தனர். அங்கு நடைபெற்ற அறுவை சிகிச்சை தோல்வியில் முடிவடைந்து விட்டது. மீண்டும் அறுவை சிகிட்சை மேற்கொள்ளலாம் என்று கூறினார் மருத்துவர். ஆனால், அன்று இரவே அவர் இறந்து விட்டார். அதன் பிறகு எந்தச் சிகிச்சையும் எனக்குப் பலன் அளிக்கவில்லை. எனக்கு உலகமே படுக்கை என்றாகி விட்டது.

"படித்தது..?" என்றோம். "ஐந்தாம் வகுப்பு வரையில் அரசுப்பள்ளியில் படித்தேன். பின்பு 6 முதல் 8 வரை கோவை அம்ரிட் சிறப்புப் பள்ளியில் படித்தேன். 10ம் வகுப்பு தனித்தேர்வாகத் எழுதித் தேர்வு பெற்றேன்".

"வெளியுலகுக்குச் செல்வது எப்போ திருந்து..?" "நான் கடந்த 2013ல் ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு எனக்கு நல்ல வரவேற்பு இருந்தது. என்னைப் பற்றி க் கேள்விப்பட்ட நான் படித்த பள்ளி நிர்வாகம்,

இராணுவ என்ஜினியரிங் பிரிவை அணுகி, எனக்கென இந்த நாற்காலியை வடிவமைத்துத் தந்தனர். அதன் பிறகுதான் வெளியில் செல்வது எளிதானது. எங்கு செல்வது என்றாலும் நானும் பாட்டியும் ஜாலியாகக் கிளம்பிவிடுவோம்" என்றார் ஒரு குழந்தையின் உற்சாகத் துள்ளலோடு அந்த 25 வயது இளைஞன்.

"ஐபோன் சரி.. அது என்ன iphone? கண்தானம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக வாட்ஸ்அப் குரூப் ஏற்படுத்தியுள்ளேன். இதில் 100 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இது மேலும் குருப் 1, குரூப் 2 என விரிவடைந்துள்ளது. மேலும் பல குரூப்கள் ஏற்படுத்த உள்ளோம்" என்கிறார் ஆராய்ச்சிக்காகத் தன் உடலைத் தானமாகக் கொடுத்துள்ள ஜெகதீஷ்.

"உங்கள் செலவுகளுக்கெல்லாம் என்ன செய்கிறீர்கள்?" என்றதும் "iphone பற்றிக் கேள்விப்பட்டதும் மதுரா டிராவல்ஸ் வி.கே.டி.பாலன் ஐயா எனக்கு அவர்கள் நிறுவனத்தின் இணையதளப் பராமரிப்புப் பணியைக் கொடுத்துள்ளார். அதன் மூலம் எனக்கு மாத வருமானம் கிடைக்கின்றது. மேலும், ப ல நிறுவனங்களுக்கு வடிவமைப்புப் பணிகளையும் செய்து கொடுக்கின்றேன். இதன் வழியாகவும் கொஞ்சம் வருமானம் கிடைக்கின்றது".

"உங்கள் எதிர்காலக் கனவு என்ன?" "கனவு என்றால், நாங்கள் இப்பக் குடியிருப்பது வாடகை



வீடு. எப்படியாவது கஷ்டப்பட்டுக் கொஞ்சம் பணம் சேர்த்து, என் பெற்றோருக்கென்று சொந்தமாக ஒரு வீடு கட்ட வேண்டும். அதன் பிறகு அவர்கள் வேலைக்குப் போவதை நிறுத்தி, வீட்டில் ஓய்வெடுக்க வைக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் இதுவரை சம்பாதித்த பணத்தையெல்லாம் எனக்கும், என் மருத்துவத்துக்குமே செலவழித்துவிட்டனர்" என்றார். பெற்றோரைப் பாரமாகக் கருதி முதியோர் இல்லத்தில் சேர்ப்போர் மத்தியில் இப்படியும் ஒரு பிள்ளையா? என ஆச்சரியப்பட வைத்தார்.

"லட்சியம் என்ன?" என்று முடிப்பதற்குள் "மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்வுத் துறைக்கு அமைச்சராக வேண்டும்" என்றார். "ஏன்?" என்றோம். "தற்போதைய நிலையில் இந்தத் துறை செயலற்றுக் கிடக்கின்றது. எந்தவொரு விசயத்திற்கும் அரசு அதிகாரிகளால் நாங்கள் அலைக்கழிக்கப்படுகின்றோம். அரசு மற்றும் தனியாரின் பொதுக் கட்டிடங்கள் பலவற்றிலும், ஊனமுற்றோர் செல்வதற்கென்று பிரத்தியேக சாய்வுப் படிகள்கூட இல்லை. மேலும், மாற்றுத் திறனாளிகளின் துன்பங்களை மற்றொரு மாற்றுத் திறனாளியால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இதுபோன்ற கொடிய அவல நிலை மாறுவதற்காகவே நான் மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்வுத் துறைக்கு அமைச்சராக வேண்டும்" என்றார்.

"என்னடா இப்படி நம்மைப் படைத்து விட்டார்? என்று ஆண்டவரையோ, விதியையோ நொந்ததுண்டா? " " இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வடிவத்தில் படைக்கப்படுகிறார்கள். நான் நானாகப் படைக்கப்பட்டிருக்கின்றேன். நீங்கள் நீங்களாகப் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒருவரைப்போல ஒருவர் படைக்கப்படவில்லை என்று எனது ஆசிரியர் கூறியது என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. எனவே, எனக்கு அந்த வருத்தமே கிடையாது. இந்த உலகத்திலேயே என்னைப் போல் யாருமே இல்லை எனும் பெருமிதமே உள்ளது".

"வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம் எது? என்றதும், ஒருமுறை கோவை வந்திருந்த மறைந்த அப்துல்கலாம் ஐயா அவர்கள், என்

தலையில் கை வைத்து, நீ மாற்றுத் திறனாளி கிடையாது. பலரை மாற்றும் திறனாளி என்று ஆசீர்வதித்த தருணமே என் வாழ்வில் மறக்க முடியா தருணம்” என்றார் நெகிழ்வாக.

“வேறு என்ன பணி செய்கிறீர்கள் ஜெகதீஷ்?” என்றோம். “பல்வேறு அறக்கட்டளைகளை ஒருங்கிணைக்கும் பணிகளைச் செய்து வருகின்றோம். அதன் மூலம் நிதி ஆதாரங்களை ஒன்றிணைத்து, செய்யும் செயல்களை மக்களின் பரவலான நன்மைக்கு ஏதுவானதாக, அதிகப் பயன்தரக்கூடியதாகச் செய்கின்றோம். குழந்தைகளுக்கு ஓவியங்கள், சின்னச் சின்னக் கைவினைப் பொருட்கள் செய்தல் போன்ற பயிற்சிகள் தருகின்றோம். இதற்கான பரிசு வழங்கல் விழாக்கள் மிகச் சிறப்பாக வருடந்தோறும் நடக்கின்றன.

இணையதளம் வழியாகப் பல்வேறு வெளிநாட்டவருக்கும் தமிழ் கற்றுத் தருகின்றேன். தமிழ் சினிமாவின் தற்போதைய போக்கை மாற்றி அதன் அடிப்படைத் தன்மையைச் சீர்படுத்த வேண்டும் இதற்கான கதை விவாதங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. தற்போதைய அரசியல் சூழல் நமக்குப் பலன் தருவதாக இல்லை. எனவே, அதில் மாற்றத்தைத் தேடி, பல்வேறு மாணவர் அமைப்புகளோடும் பேசி வருகின்றேன். இன்னும் பல காரியங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இவை அத்தனைக்கும் உறுதுணையாக





இருப்பது என் நண்பர்களே”.

நாம் ஜெகதீசோடு இருந்த இரண்டு மணி நேரங்களில் அவரது பல்வேறு நண்பர்கள் அவரைச் சந்திக்க வந்தனர். அனைவருமே ஏதாவது ஒரு விதத்தில் தங்களைச் சமூகப் பணியில் அர்ப்பணித்துக் கொண்டவர்களே. அவர்களது பேச்சுகளும், செய்து கொண்டிருக்கும் பணிகளும் நம்மை மலைத்துப்போகச் செய்து விட்டன. இடையில் தொலைபேசி அழைப்பு. பேசி முடித்ததும், பார்வையற்றோர்களுக்கென ஐ.ஐ.டி. மாணவர்கள் சிறப்பு வாக்கிங் ஸ்டிக் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அடுத்து வருகின்ற ஒரு நிகழ்ச்சியில், 30 50 நபர்களுக்கு இதை வாங்கித் தரவேண்டும். தற்போது 20 ஸ்டிக்குகளுக்குத் தொகை சேர்ந்து விட்டது. தொடர்ந்து முயன்று கொண்டுள்ளோம். அதுதான் தொலைபேசியில் பேசினேன் என்றார். மலைத்துப் போனோம்.

படுத்துக் கொண்டே ஜெயித்தவர் என மக்கள் திலகத்திற்கு ஒரு பெயருண்டு. அந்தவகையில் இவர் எந்தத் திலகம்..?

ஜெகதீசைப் பார்த்தவுடன் பரிதாபமாக இருந்தது. ஆனால் விடைபெறும்போது, பெருமிதமாக இருந்தது.

# என்னாதே

பட்டம் பெற்றவரே
பார் போற்றும் பெருந்தலையே,
தரையைத் தொடாமலே
வானில் நீர் பறந்தீரோ....

தயங்கித் தயங்கியே
திக்கெட்டும் தட்டுகிறேன்,
ஒரு பக்கக் கதவுக்கும்
துளியாச்சும் கேட்கலயா....

மல்லிகைப் பூவுக்கு
மணம் பூசத் தேவையில்லை,
பக்கத்தில் கடதாசி
ஏன் உனக்குத் தெரியவில்லை..

கள்ளிக் காட்டுக்கு
கனத்த மழை தேவையில்லை,
காசித் தும்பைக்கு
ஐந்து துளி ஊத்துமையா....

ஆலம் விழுதுக்கு
அரை வாளி கணக்குமில்லை,
முளைக்கும் நாத்துக்கு
ஒரு குவளை தாருமையா...

எட்டி எட்டி உதைக்காதே
எலிப் பொறியில் கால் வைக்காதே,
கண் தெரியாக் கண்ணி வெடி
கழுத்தறுக்கும் மறக்காதே.....

எறும்பென்று நசுக்காதே
ஏழனமாய்ப் பார்க்காதே,
ஈ நுளைந்து அரசழிந்த
சரித்திரம் நீ படிக்கலயா....

போடியார் வயித்தில் நீ
பிறந்ததனால் பணக்காரன்,
ஏழை வயித்து மகன்
உனை ஜெயிப்பான் மறக்காதே.

நானிங்கு தவிப்பதுவும்
நீ இன்று ஜொலிப்பதுவும்,
நாளைக்கே இடம் மாறும்
தட்டி என்னைக் கழிக்காதே...

**- றியாஸா எம். ஸவாஹிர்**
இலங்கை.

# அழகேசன் மாமா

H. ஜோஸ்



அழகேசன் மாமா...

கந்தலான கட்டம் போட்ட சட்டை.. கசங்கிய நிலையில் லுங்கி.. வானில் நட்சத்திரங்களை போல் ஓட்டைகள் நிரம்பிய டவல் ஒன்று தோளில்.. பின்னங்கால் தரையை தொட்டுவிட முன் பாதமும் தரையை தொட்டு விட வெகு தூரம் இல்லை அப்படியொரு செருப்பு.. குழி விழுந்த கண்கள்.. கூன் விழுந்த முதுகு.. வயது 65 க்குள் தானிருக்கும் 90 ஐ தொட்டு விட்டவர் போல் தூரத்தில் காட்சியளிக்கிறார் அழகேசன் மாமா....

இவர் தான் எங்கள் ஊரிரிலிருந்து முதன்முதலில் விமானமேறி வேலைக்கு வெளிநாடு சென்றவர்.. கிட்டதட்ட 30 வருடங்களுக்கு மேல் அங்கேயே காலம் கழித்தவர்.. விடுமுறைகளின் போது எங்கள் வீட்டு தெருவழியாக அவர் சென்றாலே நான் சொல்லிவிடுவேன் அம்மா அழகேசன் மாமா போறாரு.! அவ்வளவு வாசம் வீசும் அவர் அடித்திருக்கும் செண்டு....

முதன் முதலில் கோடாலி தைலம் அவர் கொடுத்து தான் நான் பார்த்திருக்கிறேன்.. பள்ளியில் என்னை “ஹீரோ”வாக மாற்றியிருந்த “ஹீரோ” பேனா அவர் கொடுத்தது தான்.. இன்னும் அப்படியே நினைவில் இருக்கு அவர் பேனா வாங்கி வைத்திருப்பாதாக சொன்ன அன்றிலேருந்து ஊரில் ‘பேய் மழை’ ஊரே வெள்ளக்காடு இன்னும் ஓரிருநாள் காத்திருக்க பொறுமையின்றி அம்மழையிலும் முட்டளவு வெள்ளத்தில் போய் வாங்கி வந்தேன்.. கூடவே காய்ச்சலையும்.. அதற்காக அப்பா கொடுத்த அடியின் வலி இன்னும் அப்படியே மனதில் நிற்கிறது....

அக்ஹிரோ பேனா தான் பெண்கள் அத்தனை பேரையும் என்னை சுற்றி வர வைத்தது.. ஒரு நாள் எழுத கொடுத்தால்

நீர் வற்றிய ஆறு
உழவனின்
வயிறு

வழிதோரும்
முள் மரம்
வாழ்க்கைச் சக்கரம்

சிலந்தி வலை
நூலும் வாசிப்பும்
எண்ணம்

தூரத்தைக் காட்டும்
மைல் கல்
உள்மனசு

- ஜவ்வாது முஸ்தபா

போதும் எனக்கும் சேர்த்தே வீட்டு பாடம் எழுதி கொண்டு வருவாள் மல்லிகா.. நண்பர்கள் அத்தனை பேரும் பொறாமை பட ஆசிரியர்களுக்கிணையாய் என் பாக்கெட்டிலும் ஹிரோ பேனா தொங்க காரமாயிருந்தவர் அவர் தான்....

அழகேசன் மாமாவிற்கு ஆசைக்கு ஒண்ணும் ஆஸ்திக்கு ஒண்ணுமாய் ரெண்டு பிள்ளைகள்.. குடும்பம் குழந்தைகள் என்றால் உயிர் மாமாவிற்கு அவர்களுக்கும் அப்படி தான்.. அவர் மகன் பவித்ரன் சொல்வான் வேயசாகிற போது உங்களை ராஜா போல வெச்சு பாத்துப்பேன்யு என்பான் மகிழ்ச்சி பெருமிதத்தில் சிவக்கும் அவர் முகம்.. பிள்ளைகளை நன்கு படிக்க வைத்தார் நல்ல இடத்தில் திருமணமும் செய்து வைத்தார்.. குடும்பத்திற்காக ஓடி ஓடி உழைத்தாரேயன்றி தனக்காக எதையும் சேர்த்து வைக்கவில்லை..

தன்னுடைய சொத்து பத்துக்களை பிள்ளைகளுக்கே பிரித்து எழுதிக் கொடுத்தார்.. தன் மீது உயிராய் இருந்த மகனை உயிராய் நினைக்க ஒருத்தி வந்தாள்.. அவள் மூலம் இவன் உயிராய் நினைக்கும் பூக்கள் ரெண்டு பூத்தது பேரழகாய்.. காலங்கள் எப்படி எல்லாம் மாற்றுகிறது மனிதர்களை.. புதிய குடும்பம் மற்றும் பிள்ளைகளின் வருகையில் தந்தையை மறக்க தொடங்கினான் அவன்....

அம்மாவை மட்டும் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு அழைத்து சென்றனர்.. குடும்ப தேவைகளுக்காய் பொருளீட்டும் வேட்கையில் பல தொழில் கற்றறிந்த மாமாவிற்கு... வயோதிப காலத்தில் பிள்ளைகளுடன் ஒட்டி இருக்க வீட்டை பார்த்து கொள்ளவும்! சமையல் செய்யவும்! “குறிப்பாக குழந்தைகளை கவனித்து கொள்ளவும்‘‘ தெரிந்திருக்க வேண்டும்.. என்பது தெரியாமல் போனது வேதனையே!

பசுமையாய் இருந்தவரை அதன் நிழலில் தங்கி அதன் கனிகளை புசித்து கொழுத்திருந்த பறவைகள் இலைகள் உதிர்ந்து கிளைகள் ஒடிந்த பின் இனி பலனில்லை என்பதை புரிந்து கொண்டு பறவைகள் பறந்து செல்வதை போல்.. சொந்தங்கள் விட்டுச்செல்ல இப்போது அனாதையாகி போனார் அழகேசன் மாமா....

நீண்ட இடைவெளிக்கு பின் இன்று தான் அழகேசன் மாமாவை பார்க்கிறேன்.. நலம் விசாரித்து கொண்டோம் எப்போதும் அவர் புன்னகையில் மகிழ்ச்சி மணக்கும்.. இன்றைக்கும் புன்னகைத்தார் கண்களில் ‘சோகம் படர’

மாமா சுய கௌரவ அதிகம் பார்ப்பவர் ஐநூறு ருபாய் தாள் ஒன்றை எடுத்து அவர் பாக்கெட்டில் திணித்தாவது கொடுக்க நினைத்தேன்... அதற்கு அவசியமின்றி அவரே அதை இழுத்தெடுத்து கொண்டார்.. விடைபெறும் தருவாயில் எனை பார்த்து கையெடுத்து கும்பிட்டு சென்றார்.. அவர் சிரித்தார் என் கண்கள் பனித்தது....

அழகேசன் மாமா என்னிடம் எதையும் சொல்லவில்லை ஆனால் அவர் வாழ்க்கை எனக்கேதோ சொல்கிறது புரிந்தும் புரியாமலும் “காலத்தின் கரங்களில் நானும்“

# உருவிலில்லை உயர்வு!

ராம்க்ருஷ்

சிற்றுளி பெரு மலையைத் தகர்க்கும்
இற்றுப்போக மரமரிக்கும் சிறுகரையான்
வெற்றுக் காகிதமும் விரிந்த கருத்துரைக்கும்
முற்றும் துறந்த முனிவரும் அரசாள்வார்!

பண பலம் படை பலம் கொண்டோர்கள்
குண பலம் அறிவு பலம் முன்பு தோற்றிடுவர்
சணல் சாக்கிலே சாத்தானையும் கட்டிடலாம்
பிணக் குவியலிலே பணமதிப்பு மறைந்திடுமே!

நாடாளும் அரசியலார் நல்லவராயின் நன்று
காடாக்கி சுயநலம் தேடுவாரெனில் மக்கள்
ஊடாகப் புகுந்து போராடித் தோற்கடிப்பரே
மேடாகக் கிடக்கும் நிலம்கூட நல்நாடாகுமே!

எங்கும் நியாயங்கள் தோற்கும் தோற்றமே
கங்குகளாய் கனன்று எரியும் மக்கள் கோபம்
தெங்கின் உயரத்தில் வெடித்துச் சிதறும்போது
சங்கினுள் மூழ்கும் சமுத்திரங்களாகவே!

சதிச் செயல்கள் மூழ்கி புடம்போட்ட சங்காக
அதி வேகமாக நியாயங்கள் மேலெழுமே
புதிய உலகொன்று புத்தொளியாய் மலருமே
பதியம் போட வாருங்கள் நல் மனிதர்களே...!



தானாகவே உதிர்கின்ற
பூக்கள் எல்லாமே
உன் நினைவுகளின்
எச்சங்களே அவை!

ச.இராஜ்குமார்

மலர்மதி



# அசிங்கம்

வெங்கடேசன் படங்களைக் கொண்டு வந்து சினிமா தியேட்டர்களில் திரையிடுபவன். சமீபகாலமாக அவன் கொண்டு வரும் படங்கள் எல்லாம் சரியாக ஓடாமல் நஷ்டத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தன.

‘நல்ல படங்களையெல்லாம் விட்டு ‘பலான’ படங்களைக் காலைக் காட்சியாக மட்டும் திரையிட்டால் கொள்ளை லாபம் பார்க்கலாம்’ என்று நண்பன் கூறிய யோசனையை ஏற்று அவ்வாறே செய்தான்.

என்ன ஆச்சரியம். ஒரு வாரத்தில் கிடைக்கக் கூடிய வசூல், இரண்டே நாட்களில் கிடைத்தது.

அன்று முதல் சனி, ஞாயிறு மட்டும் அசிங்கமான மலையாளப் படங்களைக் கொண்டு வந்து திரையிட ஆரம்பித்தான். பள்ளி, கல்லூரி மாணவர்கள் அலை மோதுவது பற்றி அவன் கவலைப்படவில்லை. பணத்தில் மட்டும் குறியாக இருந் தான்.



வழக்கம்போல் காலைக் காட்சிக்கான மணி அடிக்கப்பட்டது. வெங்கடேசன் கூட்டத்தைப் பார்வையிட பால்கனியில் வந்து நின்றான். டிக்கெட் வாங்க ரசிகர் கூட்டம் நெருக்கித் தள்ளிக்கொண்டிருந்தது.

அந்த வரிசையில் நின்றிருந்த தன் மகனைக் கண்டதும் திடுக்கிட்டான்.

அன்று முதல் அசிங்கமான திரைப் படங்களைத் தவிர்த்தான் வெங்கடேசன்.

இந்த மாற்றத்தைத்தான் எதிர்பார்த்தான், சினிமாவே பார்க்காத வெங்கடேசனின் மகன். வேண்டுமென்றே அப்பாவின் பார்வையில் படும்படி க்யூவில் அவன் வந்து நின்றது வெங்கடேசனைத் திருத்தத்தான் என்பது வெங்கடேசனுக்கே தெரியாது.

# நினைவுகள்



நினைவுகளால் நித்தம்
நித்திரை தொலைக்கிறேன்!

சிலநினைவுகளால்
தாலாட்டப்படுகிறேன்,
இன்னும் சிலநினைவுகளால்
புன்னகைக்கிறேன்!

சிலநினைவுகள் எழும்போது
குரோதம் கொள்கிறேன்,
இன்னும்சில நினைவுகளோ
என்கண்களை நனைக்கின்றன!

மறக்க நினைக்கும் நினைவுகள்
என்னைத் தினமும்
நினைக்கச் சொல்கின்றன!

நினைக்க வேண்டியவைகள்
அடிக்கடி தொலைகின்றன!

கரைதொட்டுச் செல்லும்
அலைகள்போல்
என் மனம்தொட்டுச் செல்லும்
சிலநினைவுகள்,

விடைகள் இல்லாத
விடுகதைகளாக சில நினைவுகள்,

முடிவில்லாத
தொடர்கதைகளாக பலநினைவுகள்,

சில நேரங்களில்
சிற்றாறுகள்போல்,
பல நேரங்களில்
பாழ்கிணறுகள்போல்,
சுழலும் ஆழிப்
பெருங்கடல்களாகவும்
அலைக்கழிக்கப்பட்டுக்
கொண்டிருக்கிறேன்!



இருந்தாலும் பயணிப்பேன்,
நம்பிக்கையென்னும் துடுப்புகளால்
நங்கூரம் கொண்டுள்ளேன் நெஞ்சில்!

நீந்திக்கடப்பேன்
நினைவுகளைத் தோற்கடிப்பேன்!

ஃபாத்திமா
ஷார்ஜா.

# யூனுஸ்

ஜி. ஆசிப் அலி
துபாய்

அந்த இஸ்லாமிய அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் அவசரமாய் கூடினர்.

“சென்னையில் பெரும் பகுதி வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. பல உயிர் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டிருக்கு. நீங்க என்ன பண்றீங்க, ஒவ்வொரு படகிலும் நாலு பேர் வீதம் எல்லா பகுதிகளுக்கும் போங்க. முடிந்த அளவுக்கு உயிர் களைக் காப்பாத்துங்க.” என உத்தரவிட்டார் தலைவர்.

அவர் உத்தரவுக்குக் கட்டுப்பட்ட இளைஞர்கள் உடனே ரப்பர் படகுகளை எடுத்துக் கொண்டு விரைந்தனர். வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளில் படகுகளைச் செலுத்தினர்.

ஒரு குறுகலான சந்தில் மிகவும் சிரமப்பட்டு நுழைந்தபோது அந்தத் தெருவில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் ஏற்கனவே அப்புறப் படுத்தப்பட்டார்களோ?

யோசனையுடன் படகைத் திருப்பினார்கள்.

“கொஞ்சம் நிறுத்துங்கப்பா..” என்றான் யூனுஸ்.

“எதுக்கு நிறுத்தச் சொல்றே?” என்று கேட்டான் கூட வந்தவர்களில் ஒருவன்.

“ஒரு முனகல் சத்தம் கேக்குது பார். உங்களுக்குக் கேக்கலை?”

“இல்லையே..”

“என்ன இல்லையே.. சரியா கேளுங்கப்பா..” என்றான் யூனுஸ்.

செவிகளைக் கூர்மையாக்கி உன்னிப்பாகக் கேட்டனர்.

“அட, ஆமா... அதோ அந்த வீட்லேர்ந்துதான் வருது.”

படகைத் திருப்பி மீண்டும் அந்த வீட்டின் முன் நிறுத்தினர்.

இடுப்பளவுத் தண்ணீரில் இறங்கி அந்த வீட்டுக்குள் நுழைந்தான் யூனுஸ்.

முன்னறையில் கட்டிலில் படுத்திருந்தாள் சித்ரா.

முக்கால்வாசி கட்டில், மழை நீரில் மூழ்கி இருந்தது.

அவளை நெருங்கிய யூனுஸ், “சிஸ்டர்... சிஸ்டர்...” என்று அழைத்தான்.

பதிலில்லை.

அப்போதுதான் கவனித்தான்.

அவள் நிறைமாத கர்ப்பிணி. ஏறக்குறைய மயக்க நிலையில் இருந்தாள்.

“யா, அல்லாஹ்வே...” என்றவன், வெளியே வந்து இன்னும் இரண்டு பேரை துணைக்கு அழைத்துக் கொண்டு அவளை மிகவும் ஜாக்கிரதையாக படகில் ஏற்றினான்.

“எந்த நேரத்திலும் டெலிவரி ஆகலாம்னு தோணுது. சீக்கிரமா ஆஸ்பத் திரிக்குக் கூட்டிப் போகணும்.” என அவசரப்படுத்த மற்றவர்களும் சூழ்நிலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து துரிதமாகச் செயல்பட்டனர்.

அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் அவள் அந்த மகப்பேர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாள்.

மற்றவர்களை அனுப்பிவிட்டு யூனுஸ் மட்டும் அங்கேயே தங்கியிருந்து அவளைக் கவனித்துக் கொண்டான்.

அரை மணி நேரம் ஓடியது.

வெளியே வந்த டாக்டர், “சரியான சமயத்துல கொண்டு வந்திருக்கீங்க. கொஞ்சம் டிலே ஆகியிருந்தால் உயிருக்கே ஆபத்தா முடிஞ்சிருக்கும்.” என்றார்.

“டாக்டர்... அவங்களுக்கு இப்ப எப்படி இருக்கு?” என்று விசாரித்தான் யூனுஸ்.

“பயப்பட ஒண்ணும் இல்லை. நார்மல் டெலிவரிதான். பெண் குழந்தை பிறந்திருக்கு.”

சொல்லிவிட்டு டாக்டர் நகர்ந்துவிட, “அல்ஹம்துலில்லாஹ்...” என இரு கரமேந்தி இறைவனுக்கு நன்றியைச் செலுத்தினான்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகே சித்ராவைப் பார்க்க அனுமதித்தார்கள்.

“சிஸ்டர் இப்ப எப்படி இருக்கு?” என்று கேட்டான் யூனுஸ்.

சித்ரா யூனுஸை நிமிர்ந்து நோக்கினாள்.

“உன்னை யார் இங்கே கொண்டு வந்து சேர்த்ததுன்னு கேட்டு நச்சரிச்சுக் கிட்டிருந்தியே,



# ச்சீ.. ஆணாக நான்

உடம்பு நெளித்து உறக்கம் கலைத்தேன் - அவள்
வாசல் தெளித்து கோலம் வைத்தாள்

கால் நீட்டி பேப்பர் படித்தேன் - அவள்
காபி நீட்டி பிடிக்கச் சொன்னாள்

படுத்து நின்று பயிற்சி செய்தேன் - அவள்
பாத்திரம் முழுதும் கழுவி முடித்தாள்

மீசை திருத்தி தாடி மழித்தேன் - அவள்
காய் நறுக்கி சமையல் செய்தாள்

பைக் ஏறி ஆபீஸ் போனேன் - அவள்
பஸ் பிடித்து பள்ளி போனாள்

ஏசி அறையில் நூல் படித்தேன் - அவள்
கத்திக்கத்தி நூலாய் வந்தாள்

வீடு திரும்பி செய்தி பார்த்தேன் - அவள்
சூடு குறையா தேனீர் தந்தாள்

முகநூல் நுழைந்து நட்பு நாடினேன் - அவள்
முறுகல் தோசை வார்த்து வந்தாள்

தூக்கம் தழுவ படுக்கை போனேன் - அவள்
துவைத்த துணிகள் மடித்து வைத்தாள்

விரித்துவைத்த மெத்தை வீழ்ந்து
உறங்கிப்போனேன் - உறுத்தலே இல்லாமல்..

- நிஜன்

இவர்தான் அந்தப் புண்ணியவான்." என்றாள் அருகில் இருந்த நர்ஸ்.

கண்களில் கண்ணீர் 'குபுக்'கென பீறிட்டது.

கையெடுத்துக் கும்பிட்டாள்.

"அண்ணா... அவரு ஒரு வேலையா பக்கத்து ஊருக்குப் போனவரு. மழையில மாட்டிக்கிட்டாரு. அவரை இங்கே வரவழைக்க முடியுமா?"

"இந்த சமயத்தில செல்ஃபோன் வேலை செய்யலையேம்மா. இருந் தாலும் நான் முயற்சி பண்ணிப் பாக்கறேன்." என்றவன் வெளியே வந்து பல இடங்க ளிலிருந்து தொடர்ந்து அவள் கொடுத்த எண்ணிற்குத் தொடர்புக் கொண்டான். ஒரு வழியாக இணைப்புக் கிடைத்து பதறியடித்து வந்து சேர்ந்தான் சித்ராவின் கணவன் மோகன்.

"எவ்வளவுத் தவிச்சுப் போயிட்டேன் தெரியுமா? உன்னை இந்த நிலையில் தனியா விட்டுப் போயிருக்கக் கூடாது. நான் ஒரு பைத்தியக்காரன்." என்று தலையில் அடித்துக்கொண்டான் அவன்.

"அண்ணே, அழாதீங்க. நீங்க என்ன பண்ணுவீங்க? எல்லாம் அந்த அல்லாஹ்வின் கிருபையால் நல்லவிதமா நடந்திருக்கு. இனி ஆகவேண்டியதை கவனிங்க.யு என மோகனுக்கு ஆறுதல் அளித்தான் யூனுஸ்.

"தெய்வத்தை நேர்ல பாத்திருக்கீங்களா? இதோ பாருங்க." என அவள் கணவனிடம் சுட்டிக்காட்டினாள் சித்ரா.

திரும்பிப் பார்த்தான் மோகன்.

அவள் காட்டிய திசையில் யூனுஸ் நின்றிருந்தான்.

யூனுஸ் பதறிவிட்டான்.

"சிஸ்டர்... என்ன நீங்க? பெரிய, பெரிய வார்த்தைங்க எல்லாம் பேசறீங்க? என்னைப் போய் தெய்வத்துக்கு ஒப்பிடறீங்க?"

சித்ரா வாயைத் திறப்பதற்குள் மோகன் குறுக்கிட்டான்.

"சித்ரா சொல்றதுல தப்பே இல்லை. சரியான சமயத்துல வந்து நீங்க சித்ராவோட உயிரை மட்டுமா காப்பாத்தி இருக்கீங்க? இன்னொரு உயிரையுமல்லவா இந்த உலகத்துக்குக் கொண்டு வந்திருக்கீங்க? எங்களைப் பொருத்தவரை நீங்க தெய்வம்தான்."

இன்னும் கொஞ்ச நேரம் அங்கே நின்றால் எங்கே தனக்கு ஒரு கோவிலைக் கட்டிவிடும் தீர்மானத்திற்கு அவர்கள் வந்துவிடுவார்களோ என பயந்த யூனுஸ், "சரி, நான் கிளம்பறேன். வேறு இடங்களுக்கும் போகவேண்டி இருக்கு." என விடைபெற்றான்.

அவனுடைய அலைபேசி எண்ணை வாங்கிக்கொண்டான் மோகன்.

மூன்றாவது நாளே அழைப்பு வந்தது.

மோகன்தான் பேசினான்.

"சொல்லுங்கண்ணே." என்றான் யூனுஸ்.

"மதியம் வீட்டுக்கு வாங்களேன்."

"எதுக்கு?"

"ஒரு சின்ன விருந்து வெச்சிருக்கேன்."

"அட, அதெல்லாம் எதுக்குங்க?"

"தயவு செஞ்சு மறுக்காதீங்க. அப்புறம் எங்க மனசு ஒடைஞ்சிடும்."

"சரி, சரி... வர்றேன்."

"அப்புறம் மறக்காம அன்னைக்கு உங்களுக்கு உதவிய சில பேர் இருந்தாங்களாமே, அவங்களையும் கூட்டிக்கிட்டு வாங்க."

"ஆகட்டும்."

சொன்னதுபோல் மதியம் இரண்டு மணிக்கு சித்ரா வீட்டுக்குப் போனார்கள்.

விருந்து முடிந்ததும் அனைவரும் ஹாலில் அமர்ந்து கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

குழந்தைக்காகக் கொண்டு வந்த கிஃப்ட் பேக்கை சித்ராவிடம் கொடுத்த யூனுஸ், குழந்தையைக் கொஞ்சிவிட்டுக் கேட்டான்.

“ஆமாம், குழந்தைக்கு என்ன பேரு வெச்சிருக்கீங்க?”

“யூனுஸ்.” சித்ராவும், மோகனும் கோரஸாகச் சொன்னார்கள்.

அதிர்ந்தான் யூனுஸ்.

“என்னது, என் பெயரா?”

“ஆமாண்ணே. உங்களை எங்களால் மறக்கவே முடியாது. வாழ்நாள் முழுக்க உங்களை நாங்க மறக்காம இருக்கத்தான் குழந்தைக்கு உங்க பேரை வெச்சி ருக்கோம்.” என்றாள் சித்ரா.

புல்லரித்துப் போனான் யூனுஸ்.

நண்பர்களில் ஒருவன் கேட்டான்.

“யூனுஸ்ங்கறது ஆம்பளைப் பையனோட பேரு. அதைப் போய் பொம்பளைப் புள்ளைக்கு வெச்சிருக்கீங்களே?”

”சட்’டென இன்னொரு நண்பன் சொன்னான்:

“அதனாலென்ன? ‘யூனுஸ் பேகம்’னு வெச்சுட்டாப் போச்சு.”

வீடு முழுக்கச் சந்தோஷச் சிதறல்.

மதவெறி மறைந்து மனிதநேயத்தை முளைக்கச் செய்யும் மழையை அனுப்பிவைத்த அந்த எல்லாம் வல்ல இறையோனை நன்றியுடன் வணங்கினான் யூனுஸ்.

■

# மெய்யும் பொய்யும்

தையும் மார்கழியும்
மாறி மாறி,
வயதுகள் நெய்யும்.

தாயும் ‘ஆ’ வும்
பருகத் தர,
காயும் கனியும்.

கனியக் கனிய
இளமைப் பழங்களை,
காலம் கொய்யும்.

முன் பாதியில்
நிலா காயும்,
பின்னரது தேயும்.

கவலைக் காயம்
காயும்,
மீண்டும் கனிந்து காயும்.

முதுமைத் தீயும்
பரவும்,
அது மெய்யை மேயும்.

சுறுட்டப் படா பாயும்
சொல் கேளா நோயும் கண்டு,
உயிர் மாயும்.

தோலோடு
சொத்தும் சுருங்கும்,
ஆயிரம் ஏக்கர் ஆறடியாகும்.

சாயும் காலம்
வாயும் வயிறும் வேறென்று,
உறவுச் சாயம் கரையும் .



முஹம்மட் றாபி
இலங்கை

# பாவேந்தல் பாலமுனை பாறூக் குறும்பாக்கள்




ஈழத்தமிழ்க் கவிஞர்களுள் சுட்டிச் சொல்லத்தக்க படைப்பாக்கத் திறனாளராக அறியப்பெறுபவர் பாலமுனை பாறுக். கவிதைத்துறையில் நாற்பதாண்டுக் கால அனுபவ முதிர்ச்சியும் அரிய பயிற்சியும் உடைய பாறுக் அண்மைக்காலத்தில் திறனாய்வாளர்களால் அதிகம் பேசப்படக்கூடிய படைப்பாளர்களுள் ஒருவராக ஆகியுள்ளார்.

அடுத்தடுத்து வெளிவந்த அவரது குறுங்காவியங்கள்தாம் அந்த ஈர்ப்புக்குக் காரணம் கொந்தளிப்பு (2010), தோட்டுப்பாய்மூத்தம்மா (2011), எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (2011) ஆகிய மூன்று குறுங்காவியங்களை வசன கவிதையில் புதிய பொருண்மைகளைக் கருக்கொண்டு விறுவிறுப்பான வீச்சுடன் படைத்து இலக்கிய உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த நிலையில் கலாபூசனம் பாலமுனைபாறுக் குறும்பாத் தொகுதி ஒன்றைத் தற்போது தந்துள்ளார். மரபில் வல்லவரான கவிப்புனல் பாறுக், புதுக்கவிதையின் பக்கம் சிறிது பயணித்து மீண்டும் யாப்பை நோக்கி வந்துள்ளார். கவிஞர்களிடம் குறும்பாக்களைப் படைக்கும் போக்குதுளிர்த்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

காய் காய் மா
காய் காய் மா
காய் காய்
காய் காய்
காய் காய் மா

என்ற அமைப்பில் 90 குறும்பாக்கள் அடங்கப் பிற பாக்கள் வேறு யாப்பில் அமைந்துள்ளன. ம். இயைபுத் தொடையும் மோனைத் தொடையும் எல்லாப் பாக்களையும் அணி செய்கின்றன. எதுகையும் அவ்வவ் விடங்களில் எட்டிப் பார்க்கிறது. பல குறும்பாக்களில் எள்ளல் துள்ளி விளையாடுகிறது.

சான்றுக்கு:

‘படைப்பாற்றல் வற்றிவிட வாடி
பத்திரிகை நிருபர்களை நாடி
படம் போடப் புகழ்தேடிப்
பாடுபடும் கலைமான்கள்
இடம்பிடித்தார் மேடைகளில் ஓடி’

ஊழல் அங்கிங்கெனாதபடி நீக்கமற எங்கும் நிறைந்து விட்டது. அலுவலகத்தில் பணி முடிக்க வேண்டுமென்றால் இலஞ்சம் கொடுக்க வேண்டிய அவலம் நிலவுகிறது. ஆணாக இருந்தால் பொருளையும் பெண்ணாக இருந்தால் உடலையும் கேட்கும் அயோக்கியர்களின் இருப்பைப் பல பாக்களில் பதிவுசெய்துள்ளார் கவிஞர்.

‘கந்தோரில் கையூட்டுப் பெற்றான்
கடமைகளில் தவறியவன் கெட்டான்
வந்தவனை பொலிஸாரே
வலைவீசிப் பிடித்ததனால்
இன்றவனோ கூண்டிலகப் பட்டான்’

என்று இலஞ்சப் பேர்வழிகளின் இறுதிப் புகலிடம் சிறை தான் என்பதை உணர்த்தி எச்சரிக்கிறார்.

பெண்கள் பண்பாட்டை மறந்து பாழாகும் நிலையை,

‘எழிலரசி எதிர்வீட்டுச் சீதை
எவனோடு ஏகினளோ கோதை
பழிசுமந்தாள் வயிறூதிப்
பதைபதைத்தாள் ஊர்கேட்க
விழிபிதுங்கி நின்றனளே பேதை’

என்ற பாவும்

‘அற்புதமாய் மெட்டெடுத்துப் படித்தாள்
அபிநயமும் அழகழகாய்ப் பிடித்தாள்
பொத்தென்று விழுந்தனளே
போய்ப்பார்த்துச் சுழித்தார்கள்
இப்படியேன் வாந்திவரக் குடித்தாள்’

பாலமுனை பாறூக்



என்ற பாவும் சுட்டுகின்றன.

‘பக்கத்து வீட்டிலொரு பாவை
பால்நிலவு வதனத்தாள் பூவை
முப்பதையும் தாண்டிவிட்டாள்
முடியவில்லை திருமணமே
எப்படியும் சீதனமாம் தேவை’

என்னும் குறும்பா வரதட்சணைக் கொடுமையால் வாடும் முதிர்கன்னிகளின் அவல நிலையை
அறிவிக்கிறது.

‘இன்ரநெட்டால் வந்ததந்த இணைப்பு
எழுந்துவிட்டார் ஓட்டலுக்குஅழைப்பு
சென்றங்கே பார்த்தவரோ
சிரசினிலே கைவைத்தார்
வந்தவளோ அவர்மகனின் பிணைப்பு’

என்ற குறும்பா ஒழுக்கக் கேட்டால் விளையும் குடும்பச் சீர்குலைவைச் சித்திரிக்கிறது.

‘பட்டினியில் பசிபிணியில் கிடந்தார்
பலமாதம் வாடிஅவர் மடிந்தார்
இத்தனைநாள் எங்கிருந்தார்
இவர்களவர் உறவினராம்
கத்தத்தைக் கொடுக்கத்தான் விரைந்தார்’

என்ற பா மாய்ந்து விட்ட மனிதநேயத்தையும் போலி மனிதர்களையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

தமது கவிதைகளைச் சமுதாயத்தை எதிரொளிக்கும் கண்ணாடியாகக் காட்டுவதோடு நின்று விடாமல் அறிவுரைகூறும் ஆயுதமாகவும் கவிஞர் கையாண்டுள்ளார்.

‘ஈரைந்து மாதங்கள் சுமந்து
ஈன்றாளே தாயவளை மறந்து
பேரென்ன புகழென்ன
பேச்சென்ன நிறுத்ததனை
போய்ப்பாருன் தாயினைநீ திருந்து’
‘மக்களொடு அன்பாகப் பழகு
மதித்தவர்க்குப் பணிபுரிய இளகு
கட்டிவைத்த நாயாகக்
கடமையில் குரையாமல்

ஒத்துழைப்பாய் உத்தியோகம் அழகு'

என்பன போன்ற அறிவுரைகளை இந்நூலில் பரக்கக் காணமுடிகிறது.

இவ்வாறாகப் பாலமுனை பாறுக்கின் குறும்பாக்களுள் சில குறும்புப் பாக்களாகவும், பல சமூக உணர்வு அரும்பும் பாக்களாகவும் மிளிர்கின்றன.

நெய்திறம் மிக்க நெசவாளர் செய்த நேரிய நூலாகிய இந்நூல்இலக்கியச் சுவைஞர்களின் உள்ளங்களில் உயரிடம் பிடிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அன்புடன்,

மு.இ.அகமது மரைக்காயர்

தமிழ்மாமணி, செந்தமிழ்ச் செம்மல்,
கவிச்சுடர், கலைக்கோமாமணி,
பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்
தமிழ்த்துறை,
புதுக்கல்லூரி,
சென்னை 600 014

விலை ரூபா 300/ இலங்கையில்
தபாற் செலவு தனியானது.

முகவரி
பாலமுனை பாறூக்
14ஏ, பர்ஹானா மன்ஸில்,
பாலமுனை - 03 (32354)
ஸ்ரீலங்கா




எங்கேயோ பார்த்து பரிச்சயப்பட்ட முகம்

சட்டென நினைவு வரவில்லை,

மூளையை குடைந்து கொண்டிருக்க,

ஆங் நினைவுக்கு வந்தது. அது யாருமல்ல

கோபால் அண்ணன்தான் ஆறடி உயரம் நல்ல உடற்கட்டு, முறுக்குமீசை, தங்கக் கைகாப்பும்,

சங்கிலியும் புல்லட்டில் அவர் வரும் அழகே தனிதான், அவரா இப்படி? பரட்டை தலை, பிசுபிசுத்த தாடி, அழுக்கு தேகம், கிழிந்த உடை.

என்னாயிற்று நண்பன் விவரிக்க, செல்வி அக்காவும் கோபால் அண்ணனும் காதலித்தது ஊருக்கே தெரியும், இது விஷயமாக கோபால் அண்ணனுக்கும் அவர் அப்பா நாட்டாமைக்கும் அடிக்கடி சண்டை வரும், என் அப்பாவுக்கு வெளியூர் மாற்றலாகி நாங்கள் சென்றதும். பின்பொருநாள் செல்வி அக்கா குடிசை எறிந்ததும், செல்வி அக்கா நாட்டாமைகிணற்றில் பிணமாய் மிதந்ததையும் சொல்லி முடிக்க, புரிந்தது எனக்கு. பாவம் கோபால் அண்ணன் அவர் வரையில் இன்னும் செல்வி அக்காவுடைய நினைவில்தான் வாழ்கிறார் என்பதை அவர் உதட்டின் முனுமுனுப்பு கூறியது செல்வி செல்வி செல்வி....

ரா. கணேஷ்தேவிப்பட்டினம்.

# கொரிய மொழிபெயர்ப்பு கவிதை

பல சமயங்களில்
ஒரு சிறு விதையாய் இருக்கவே விளைகிறேன் நான்
அஃது வளமானதொரு நிலத்தில் வீழவும் வேண்டும்.

என்னிடம் உள்ளனவெலாம் இவைகளே
குறையிலாநிறை, களங்கமிலாதூய்மை,
நெஞ்சுரம்!

என்னைக் கொடுக்கச்சொல்லிக் கேட்டால்
விலைமதிப்பில்லாத அதை,
மீதமுள்ள அந்த ஒன்றேயொன்று இவைதான்!

கவினுரு மரத்தின் மலர்களும்கூட உதிர்வதைக் கண்டாய்
ஆயின் கனி ஈனச் செய்தது அது,

இப்படித்தானே, எமக்குச் சிரிப்பை வழங்கியபின்,
எம் கண்ணீரையும் புதுப்பித்துவிட்டாய் நீ.

## Tears by Kim Hyun-seung

Often
I wish to be a small seed
falling to the fertile ground.

These are all I have–
flawless, spotless,
unbroken!

When I am asked to offer
what is most precious,
these are the only ones I have left!

You saw the flowers of a beautiful tree
withering
and made it bear fruit,

and, after giving me laughter,
you have renewed my tears.

## 눈물/김현승

더러는
옥토(沃土)에 떨어지는 작은 생명이고저.

흠도 티도,
금가지 않은
나의 전체는 오직 이뿐!

더욱 값진 것으로
드리라 하올 제,
나의 가장 나아종 지니인 것도 오직 이뿐!

아름다운 나무의 꽃이 시듦을 보시고
열매를 맺게 하신 당신은,

나의 웃음을 만드신 후에
새로이 나의 눈물을 지어 주시다.

Pavala Sankari & Gi Moon Yang

# கௌசியுடன் கொஞ்ச நேரம்

நேர்க்காணல் அமின்

அறிமுகம்

என்னைப் பெற்றெடுத்த நாடு இலங்கை. என்னை வளர்த்தெடுத்த நாடும் இலங்கை. ஆனால், நான் தற்போது வாழுகின்ற நாடு ஜேர்மனி. இலங்கையின் கிழக்குக் கரையோரம் மீன்பாடிய மட்டுநகர் மண்ணிலே ஏறாவூர் என்னும் இடத்தில் வேலுப்பிள்ளை, பரமேஸ்ரி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தேன். சகோதரர்கள் இருவர் இன்னும் இலங்கையில் வாழ்கின்றார்கள், ஒரு சகோதரி இலண்டனில் வாழ்கின்றார். ஆரம்பக்கல்வியை ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தில் கற்றுப்பின் 7 ஆம் வகுப்பில் இருந்து வின்சென்ட் மகளிர் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தேன். பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழின் தேர்ச்சியைத் தந்தது. அதனால், தமிழில் பட்டப்படிப்பை முடித்தேன். அதனைத் தொடர்ந்து ஆசிரியப்பணி. அக்காலகட்டத்திலேயே கல்வியியலில் டிப்ளோமா முடித்தேன். ஆசிரியர் ஆலோசகராகவும் பணியாற்றினேன். 9 வருட ஆசிரியப் பணியின் பின் ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தேன். ஜேர்மனியில் இலண்டன் தமிழ் வானொலியில் கவிதை, கட்டுரை, சிறுகதை என என் படைப்புக்கள் வெளியானது. அத்துடன் ஓடிவிளையாடு பாப்பா, இலக்கியநேரம் போன்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினேன். ஜேர்மனியிலில் இருந்து வெளிவரும் மண் சஞ் சிகையிலும் என் படைப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினராகவும், ஜேர்மனி தமிழ் கல்விச்சேவை செயற்பாட்டுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றுகின்றேன். சொந்தமாக www.gowsy.com, என்னும் ஒரு இணையத்தளத்தினை நிருவகித்து அதில் எழுதி வருவதுடன் கௌசி என்னும் புனைப்பெயரில் பல சஞ்சிகைகளிலும், இணையத்தளங்களிலும் என் படைப்புக்கள் வெளிவருகின்றன.


Gowsy

இலக்கிய உலகிற்குப் பிரவேசித்தமைக்கான காரணம்?

சுவாசிப்பதற்கு காரணம் கேட்க முடியுமா? உயிரின் துடிப்புக்கு ஏன் என்ற கேள்வி சரியா? கற்ற கல்வியும், சூழ்நிலையும்,

மனதின் ஆர்வமும், மனிதனை ஒரு பாதை போடச் செய்கின்றது. ஏனோ வாழ்கின்றோம் என்பதை விட இப்படித்தான் வாழவேண்டும் என்ற உள்ளத் தூண்டல் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டும் அல்லவா? அந்த வகையில் இலக்கிய உலகம் எனக்கு பிடித்திருக்கின்றது. ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைக்கு உதவி நாடி வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராஜா அவர்கள் வாசல் படியை நாடினேன். அவர் வீட்டு நூலகம், அவர் தந்த ஊக்கப் பேச்சு, எனக்குள்ளே ஒரு விதை போட்டிருக்க வேண்டும். அவரின் தூண்டலினாலேயே என்னுடைய முதல் பதிவு தினகரன் பத்திரிகையில் வெளியானது. அதைத் தொடர்ந்து ஓரிரு பதிவுகள் எழுதினேன். பின் படிப்பு, தொழில் என்று கவனம் திசை திருப்பப்பட்டது. பின் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் மண் சஞ்சிகையில் எழுதத் தொடங்கினேன். அக்காலப்பகுதியிலேயே இலண்டன் தமிழ் வானொலியில் தொடர்ச்சியாக எழுதத் தொடங்கி இலக்கியத் துறையை இறுகப்பிடித்துக் கொண்டேன். பொதுவாகவே வாசிப்பை நேசிப்பேன். வாசிப்பது அனைத்தையும் என் மூளை படம் பிடிக்கும் என்று சொல்லிவிட முடியாது மூளை தனக்காக சேகரிப்பதை விட அழி த்துவிடுவதுதான் அதிகமாகப்படும். ஆயினும் நான் அவற்றை மூளைக்குள் போட்டு பழுதுபார்த்து, எனது எண்ணக் கருத்துக்களை அதனுடன் பொருந்த வைத்து பதிவு செய்து விடுவேன். இவ்வாறுதான் இலக்கிய உலகில் பிரவேசித்தேன்.




ஒரு எழுத்தாளன் வலைப்பூவில் எழுதுவது சிறந்ததா? அல்லது முகநூலில் எழுதுவது சிறந்ததா?

முகநூல் ஒரு சத்திரம் போன்றது. அங்கு பலரைச் சந்திக்கலாம், பலருடைய பல பக்க இரசனைகள் காட்சிப்படுத்தப்படும். அங்கு படைப்பாளிகள் பிரபல்யப்படுத்தப்படுவர், பதிவுகள் பலரைச் சென்றடையும். ஆயினும் அங்கு சிந்தனைகள் சிதறடிக்கப்படும். ஆனால், வலைப்பூ ஒருவ்ரின் சொந்தவீடு போல் அமைகின்றது. தமது அறிவுப்

*ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரின் பாராட்டு*



## ஈரம்

*ஈரம் காய்ந்த உலகை
பற்றியிருக்கிறது
நாளைய நம்பிக்கையற்ற
வேர்கள்*

*இலையற்ற, கனியற்ற
கிளையின் விரல்கள்
வானோக்கி
இறைஞ்சி நிற்கின்றன*

*இருள் கவிழும் பொழுதில்
எங்கிருந்தோ வந்தமர்கிறது
என் கிளையில்
ஒரு பறவை...*

*சரவணன் லாயர்*

படையல்களைச் சுதந்திரமாக எழுத்தாளர்கள் பலருக்கு அறிமுகப்படுத்துகின்றார்கள். இலக்கிய கர்த்தாக்கள் மாத்திரம் அங்கு பிரவேசிப்பார்கள். சரியான முறையில் படைப்புக்கள் உள்வாங்கப்பட்டு பின்னூட்டங்கள் இடப்படும். இத்தளத்தில் இதைப் பெறலாம் என்று நம்பி பிரவேசிக்க முடியும். என்னைப் பொறுத்த வரையில் எழுத்தாளன் வலைப்பூவில் எழுதுவது சிறந்தது. முகநூலில் எழுதியதை விளம்பரப்படுத்துவது சிறந்தது.

**ஈழத்தில் பிறந்து புலம்பெயர்ந்து வாழும் நாட்டில் தமிழின் செல்வாக்கு எப்படி இருக்கின்றது?**

ஈழத்தமிழர் எங்கு சென்றாலும் தமது தாய்மொழியை தவிக்கவிடப் போவதில்லை. வேற்று மொழிகள் பேசப்படுகின்ற நாட்டிலே பல்வகைப்பட்ட கலாச்சாரங்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற நாட்டிலே முற்றுமுழுதாக தமிழின் செல்வாக்கை நினைத்துப் பார்க்க முடியாது. ஆயினும் ஈழத் தமிழர்கள் தாம் வாழுகின்ற பகுதிகளில் சேவை நோக்குடன் தமிழ் பாடசாலைகள நடத்தி, கலைகள் கற்பித்து, தமிழ்சங்கங்கள் நிறுவி தமிழுக்குரிய அந்தஸ்தைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

**குடும்பம், அலுவலகப்பணி, ஆசிரியப்பணி, என்று நகரும் தாங்கள் வலைப்பூவிலும் எழுதுகின்றீர்கள் இது எப்படி உங்களால் சாத்தியப்படுகின்றது?**

மனதில் ஒன்றை நினைத்தால் அதைச் செய்து முடித்துவிட வேண்டும் என்னும் உத்வேகம் என்னை உறங்க விடாமல் செய்யும். முடியாது என்று நினைத்துவிட்டால் வாழ்வின் பல சுவாரஸ்யங்களை நாம் இழந்து விடுவோம். அலுவலகப்பணியை நான் நேசிக்கின்றேன், எழுத்தை நான் சுவாசிக்கின்றேன், என் குடும்பத்தை என் உயிராய் சுமக்கின்றேன். அதனால், இவை எல்லாம் எனக்கு ஒரு சுமையாகத் தெரியவில்லை. சுகமாகவே இருக்கின்றன.

**தங்களின் படைப்புக்களை தொகுத்து நூலாக வெளியீடு செய்துள்ளீர்கள் வரவேற்பு எப்படி இருந்தது?**

எனது முதல் நூல் என்னையே நானறியேன் என்னும் நாவல் 2013 ல் வெளியானது. இது ஒரு உண்மைக்கதை. கதையின் நாயகியே இந்நூலை வெளியீடு செய்தார். இலக்கியச்சுவை மிகுந்த இந்நூல் ஜேர்மனி நாட்டின் அனைத்து நடைமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆனால், அந்நூல் என்னுடைய இரண்டாவது நூலான முக்கோண முக்குளிப்பு பெற்ற வரவேற்பைப் பெறவில்லை. காரணம் அந்நூல் சரியான இடங்களைச் சென்றடையவில்லை. ஜேர்மனியில் மட்டும் வெளியீடு செய்யப்பட்டது. வேறு இடங்களுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால், முக்கோண முக்குளிப்புக்கு முகநூல் நண்பர்களின் ஆதரவு கிடைத்தது. அவர்களின் உதவியுடனே மலேசியா, ஜேர்மனி, இலண்டன் ஆகிய இடங்களில் வெளியீடு செய்யப்பட்டன. இலங்கையிலும் 28.08.2016 இல் வெளியீடு செய்யப்பட இருக்கின்றது.

**தங்களின் இலக்கிய பயணத்திற்கு தங்களின் குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பு எப்படி உள்ளது?**

ஒரு பெண் சாதிக்கத் துடிக்கின்றாள் என்றால், அவள் சாதனையின் பின் அவள் கணவனின் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். கணவனின் ஒத்துழைப்பு இல்லாமல் ஒரு பெண்ணால் எந்த உச்சத்தையும் தொட்டுவிட முடியாது என்பது உண்மை. அந்த வகையிலே எனது கணவன் எனது முயற்சிகள் எல்லாவற்றிற்கும் துணை நிற்கின்றார். எனது மகள் என்னுடைய முயற்சிகளை ஊக்கப்படுத்துகின்றார்.

தமிழ்நெஞ்சம் பற்றிய தங்களின் கருத்து...

கலைஞர்களை, இலக்கிய கர்த்தாக்களை அடையாளப்படுத்துவதிலும், அவர்களை வளர்த்து விடுவதிலும் நிறைந்த பங்களிப்பாற்றுகின்றது. தரமான படைப்புக்களை தெரிவுசெய்து வெளிப்படுத்துகின்றது. அந்த வகையில் தமிழ்நெஞ்சம் மணம் பரப்பி உலகலாவிய ரீதியில் உச்சத்தைத் தொட வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.

வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கு தாங்கள் சொல்லவிரும்பும் கருத்து...

படைப்புக்கள் என்பது சாதாரணமான வரிகள் அல்ல. உள்ளத்தில் உள்ளதை எல்லாம் கொட்டிவிடும் குப்பைத் தொட்டியுமல்ல. ஆழ்ந்து ஆராய்ந்து எதை யாருக்குக் கொடுத்தால் சமுதாயம் செழிமையுறுமோ அதைத் தேடிப் படைக்க முன் வரவேண்டும். உங்கள் எழுத்துக்களால் ஒரு மனிதனை மாமனிதனாக உருவாக்க முடியுமென்றால், எழுத்தெண்ணும் ஆயுதத்தை நீங்கள் கைப்பற்றியதற்கு சிறந்த பலனைப் பெற்றுவிட்டீர்கள் என்பது உறுதியாகும். உங்கள் எழுத்தின் மூலம் வாழும்போதே ஒரு சிந்திக்கும் ஆற்றல் உள்ள ஒரு சமுதாயம் உருவாவதைக் கண் கொண்டு பார்ப்பீர்களானால் உலகம் உங்களை ஏற்றித் தொழும். இன்று தூற்றியோர் நாளை போற்றுவர்.

சொல்லும் செயலும் ஒன்றானால் இவ்வுலகம் சொல்லும் உங்கள் பெயர்.

■



## யாராவது தூண்டிலோடு வருவார்களா?

ஒரு ஜன்னலின்
கதவொன்றில் தெரிகிறது
அவளின் நிழலாடும்
உருவம்...

இரவுநேர வெப்பச் சலனத்தில்
கிணற்று நீரில்
எத்தனை முறை குளிப்பது
சலித்துக்கொள்ள முடியாத
உடல்சூட்டில் தணியாத
பெண்மையின் படைப்பு

பகலில் கூட தூங்கமுடியாது
இனம்புரியாத கனவுகளை
ஏற்க மறுத்தாலும்
பருவத்தின் பிடிக்குள்
சிக்கித் தவிக்கவே செய்கிறது
மனத்தின் கெண்டைகள்

மீண்டும் ஜன்னலின்
கதவிடுக்கில் பார்த்துக் கொண்டே
விம்முகிறாள்...
யாராவது தூண்டிலோடு
வருவார்களா?
துன்பக் கடலின் மீது
வலைவீசி என்னை பிடிக்க!

கா.ந.கல்யாணசுந்தரம்

துபாயில்
ஷோபியாவின்

# 'கனலி' நூல் வெளியீட்டு விழா

துபாய் : துபாயில் பணிபுரிந்து வரும் திருமதி.ஷோபியா அவர்களின் கவிதை நூல் தொகுப்பு 'கனலி' 29.06.2017 வியாழக்கிழமை மாலை துபாய் வசந்த பவன் உணவகத்தில் வெளியிடப்பட்டது. ஓசூரை சேர்ந்த இவர் ஷார்ஜாவில் தமிழ் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.







துபாய், அல்நாதா வசந்தபவனில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக காப்பியக்கோ திரு.ஜின்னா சர்ப்புதீன் அவர்கள் கலந்துக் கொண்டார். அபுதாபியைச் சேர்ந்த எழுத்தாளர் யூசுப் தலைமையேற்றார். திருமதி. ஜெஸிலாபானு, ஆசிப் மீரான், திரு.கவின்முருகு, திரு.இளையராஜா, திரு.சிம்மபாரதி, திரு.சசிக்குமார், திரு.ஜியாவுதீன், திருமதி.சௌமியா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.





விழாவில் தமிழ்க்குஷி.காம் இணைய வானொலியின் தொகுப்பாளர் சுமிதா ரமேஷ், அபுதாபியைச் சேர்ந்த பெண்கள் வேலை வாய்ப்பு குழுவை நடத்தி வரும் ஜெஸி விக்டர், தமிழ்த்தேர் அமைப்பின் உறுப்பினர்கள், நண்பர்கள், ஆசிரியைகள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்துக் கொண்டனர். திருமதி.ரமா மலர்வண்ணன் வரவேற்புரை மற்றும் நன்றியுரை வழங்க, திருமதி.ஹேமா சிவராஜ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

# தி. வினோதினி

# புதுச் சப்பாத்து



ஓவியம் : உமாபதி

இரவின் இருள் கிழித்து தன் அதிகாரத்தை பரப்பும் முயற்சியில் அதிகாலை சூரியன் தன் கதிர்களை மெல்ல மெல்லப் பரப்பி மலை முகடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தான். அவன் மீது கொண்ட காதலாலோ என்னவோ பனித்துளிகள் எல்லாம் கசிந்து உருகிக்கொண்டிருந்தன. கரைந்து போகும் பனித்துளியின் காதோரம் சேதி சொல்லி காற்று சில்லென்று வீசிக்கொண்டிருந்தது. சில்லென்று மேனியை மோதிக் கடக்கின்ற குளிர்ந்த காற்றின் ஈரப்பதனையும் காலைப் பொழுதின் ரம்மியமான சூழலையும் ரசிக்க முடியாதவளாய் சுற்றி வளைந்து செல்கின்ற மஸ்கெலிய மலைச் சாலையோரம் விறு விறுவென வேகமாய் நடந்து கொண்டிருந்தாள்.

பதின்ம வயதைத் தாண்டாத அந்தச் சிறுமி. அவளது அம்மம்மா நேற்று வாங்கித்தந்திருந்த புதிய சப்பாத்து கால்களைக் கடித்தது. எனினும் நேற்றையை விட இன்று நடையில் வேகம் கூடியிருந்தது.

தோளில் சுமந்திருக்கின்ற புத்தகப்பையின் ஓரமாய் கிழிந்திருக்கின்ற துவாரத்தின் வழியே கீழே விழுந்த பேனாவை குனிந்து எடுத்தவளின் காதுகளில் தூரத்தில் கேட்ட பாடசாலை மணி படார் என்று அறைய நடையினை இன்னும் வேகப்படுத்தினாள்..

“வாற கிழம உனக்கு எப்பிடி எண்டாலும் புது புத்தகப்பை வாங்கித்தாறன்.” காலையில் பாடசாலைக்கு புறப்படும் போது அம்மம்மா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

“அவசியம் இந்த புத்தகப் பைய வாங்கோணுமா?.. வாங்கினா நலம் தான் ஆனா... சே... வேணாம் வேணாம் இந்தமுற வேணாம். கொஞ்ச நாளைக்குப்பிறகு வாங்குவம்.” “அம்மம்மா பாவம்.. அவோக்கு மருந்து வாங்காம எனக்கு வேற சப்பாத்து வாங்கித் தந்தவா புத்தகப்பைய பிறகு வாங்குவம்.” தனக்குத்தானே பல கேள்விகளையும் பதில்களையும் மாறி மாறிக் கொடுத்து ஓரங்க நாடகம் நடத்தியபடி நடந்து கொண்டிருந்தாள்.

சாமானிய மக்களின் வாழ்க்கையில் நிறைவேற்றப்பட வேண்டிய எத்தனையோ தேவைகள் இப்படித்தான் பல மனப் போராட்டங் களைச் சுமந்தபின்பே நத்தை வேகத்தில் நிறைவேற்றப்படுகின்றன. இன்னும் சில கற்பனைகளோடு கரைந்து வாழ்விழக்கின்றன.

இங்கும் அப்படித்தான் பாடசாலையை நோக்கிய அவளது பயணம் நேற்றையை விட இன்று வேகமாக இருந்தாலும், புதிய சப்பாத்தை அணிந்திருக்கின்ற போது மனதில்

# ஸ்பரிசம்

அலைபேசியில் தகவலை
அறிந்ததும் துள்ளியெழுந்து
புறப்பட எத்தனிக்கையில்
மனைவியவள் தானும்
மனம் இன்புற
கையோடு அழைத்துச்சென்றேன்

மணமாகிய தங்கையின்
வீட்டினுள் நுழைய
அனைவரின் முகத்திலும்
சிதறிய பட்டாசாய்
பரவியது பரவசம்

அந்த காற்றடைத் மெத்தையில்
பிஞ்சுமுகம்
மூடிய கண்களுடன்
உறங்கியிருக்க
மெதுவாய் சிரம் தடவிப்பார்த்து
கைகளில் பற்றியெடுக்க

சிணுங்களாய்
' .. மியாவ் .. மியாவ்... என்றது .

:-

பானால். சாயிராம்
தஞ்சாவூர்

மகிழ்ச்சி தோன்றவில்லை. பல சங்கடங்களும் நெருடலான மனதிற்கு உவப்பற்ற உணர்வுமே ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

நினைவு தெரிந்த சிறுபிள்ளைப் பிராயத்தில் இருந்து அவள் பார்த்து கேட்டு வாழ்ந்து பழகிய பல நிகழ்வுகள், இப்படியான மனோநிலையை ஏற்படுத்தியிருக்கலாம். நாட்டின் முக்கிய பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும் மலையக மக்களின் வாழ்க்கை முறை என்பது ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்களை விட மாறுபட்டதாகவே இருந்து வருகின்றது.

புறக்கணித்தலின் பல வடிவங்களும் சுரண்டல்களும் இங்கே பல தளங்களில் அரங்கேற்றப்பட்டுக் கொண்டுதான் இருக்கின் றன. கொட்டும் மழையிலும் ஈரலிப்பிலும் தேகத்தைக் குத்தி விரியும் குளிரிலும் சதா தேயிலை மரங்களோடு போராடி தேயிலைக் கொழுந்துகளை சுமந்து வாழ்வதென்பது சுற்றுலாப் பயணிகளின் கண்களிற்கு உவப்பானதாக இருக்கலாம்.

ஆனால், உவர்கசியும் கண்களில் விரியும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியினதும் தேவைகள் காலத்தால் மட்டுப்படுத்தப் பட்டவை என்பது வெற்றுக் கண்களிற்குப் புலப்படாத ரகசியம். அருகில் மருத்துவ வசதிகூட இல்லாத தோட்டத்தின் லயத்து வீட்டில் பிரசவ வலி எற்பட்டு வைத்திய சாலைக்கு செல்லும் வழியில் தான் பிறந்த சமயத்தில் தன் தாய் இறந்திருக்கிறாள் என்ற சேதியினை அம்மம்மாவின் வாய்வழி கேட்டிருக்கிறாள்.

ஈரத்தில் கசிந்து சற்று அழிந்து போன புகைப்படத்தில் மங்கலாய் தெரிந்த அம்மாவை ஒரு முறை அவள் பார்த்திருக்கிறாள். எப்போதோ பார்த்த அந்த புகைப்படத்தை தவிர அவளது அனைத்து உறவுகளும் அம்மம்மாவே. வயது முதிர்ந்து முதுமையை எட்டிக்கொண்டிருக்கும் தனது அம்மம்மா நேற்று அயல் வீட்டு முத்தம்மாவிடம் புலம்பிக்கொண்டிருந்தது இவளிடம் பல கேள்விகளை உருவாக்கியிருந்தது.

மாறியும் மாறாத காய்ச்சலோடு கொழுந்து பறிக்கப் போகும் அம்மம்மா இருபது கிலோவிற்கு மேல் கொழுந்து பறிக்க வேண்டுமாம். காலைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளையும் மீறி பறித்துச் சுமக்கின்ற கொழுந்துகளிற்கான கூலி வெறும் அறுநூறு ரூபாய் மட்டும்தான் சம்பளமா கொடுப்பாங்களாம்.

“ஏன் இப்பிடி? இங்க மட்டுமா இப்பிடி?”

“இலங்கைல எல்லாருக்குமே இப்பிடித்தான் சம்பளம் குடுப்பாங்களோ?” “அதில்லாம மாசம் மாசம் கட்சிக்கு எண்டு காசு குடுக்கோணுமாமே அதயும் சம்பளத்தில கழிப்பினமாமே.. என்ன இது? எதுக்கு இப்பிடி? “அம்மம்மாதான் எந்த கட்சியிலயும் இல்லயே.. அவ ஒரு கூட்டங்களுக்கும் போறதில்லயே பிறகு எதுக்கு இப்பிடி காசு கழிக்கினம்...” “பாவம் அவோக்கு மருந்து வாங்க காசு காணாது..” “அதுசரி காசு தான் கழிக்கினம் அதெதுக்கு இவய வச்சு வேலையை நிப்பாட்டி ஸ்ரைக் எல்லாம் பண்ணினம்? அப்பிடிச்செய்தா பாவம் அம்மம்மாக்கு தானே சம்பளம் வராது.” “என்ன இது... ஏன் இப்பிடி??” ஓராயிரம் கேள்விகள் பதின்ம வயதை தாண்டாத அந்தச் சிறுமியின் மண்டையை குடைந்தது. அவளுக்கு விடை தெரியவில்லை.

நேற்று மாலை அம்மம்மாவுடன் தோட்டத்தில் கரட் புடுங்கியபடி நின்ற அவளையும் அம்மம்மாவையும் தோட்டத்தைப் பார்க்க வந்திருந்த வெள்ளைக்கார சுற்றுலாப் பயணி ஒருவர் “போட்டோ பிளீஸ்!” எனக் கேட்டார். “எனக்கு போட்டாதான் இப்ப இல்லாத குற...” முணு முணுத்தபடி தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்தபடி போட்டோவிற்கு நின்றாள் அம்மம்மா ...

“எங்கட சனங்களுக்கு எப்பதான் விடிவு வரப்போகுதோ தெரியா... நீ படி அப்பதான் இது எல்லாத்தேம் வெல்லலாம். படிப்பு மட்டும் தான் இப்ப எங்களுக்கு உதவும்.. இல்ல எண்டா என்ன மாதிரி நீயும் தேயிலகூடய தூக்கிக்கொண்டு இந்த குளிர்ல இப்பிடியே.. ம்... ம்...” நீண்ட பெருமூச்சை உதிர்த்தாள்.

“சரி வா போவம், என்ற படி அவளை அழைத்துச் சென்றாள். நேற்று நடந்த இந்த சம்பவங்கள் எல்லாம் சிறியவளின் மனதை சற்று கடினப் படுத்தியிருந்தன.

நடையின் வேகத்தை குறைத்து குனிந்து கால்களைப் பார்த்தாள். “அம்மம்மா வாங்கித்தந்த சப்பாத்து...” வார்த்தைகள் கனத்து வெளிவந்தன. குனிந்து சப்பாத்துக்களைக் கழட்டி கைகளில் எடுத்தாள்.

# ஹைக்கூ

விளக்கை அணைத்தால்
இன்னும் தெளிவாக தெரியும்....
இந்த இரவு

மழை பெய்தால் இலகுவாக
எண்ணிவிடலாம்...
குடிசையின் ஓட்டைகளை

முறிந்தாலும் பலமாக
நிற்கிறது...
மனதில் காதல்

பூவில் தேனெடுக்கும் பட்டாம்பூச்சி
கொஞ்சம் அவசரப்படாதே...
காற்றே

ஒளிரும் சூரியனுக்கு
கண்கள் இரண்டிருக்கிறது...
குழந்தையின் ஓவியத்தில்

காற்றிலசையும் மரத்தை
அசையாதபடி அமிழ்த்துகிறது...
ஒரு நொண்டிக் காகம்

இறந்த மாட்டின் முதுகு
இன்னும் அடிவாங்குகிறது...
பறை

ஒட்டிய வயிற்றுடன் தூண்டிலிடும்
சிறுவன் கையிலிருக்கிறது
ஏராளம் இரைகள்...

பா. தா
(ராஜன், மகிழூர், மட்டக்களப்பு)

பாடசாலையை நோக்கி வேகமாக நடந்தாள். சாலைகளின் ஓரத்தில் ஆங்காங்கே திட்டுத்திட்டாய் வெளித்தெரியும் பாறைகள் கால்களை உரசியது. இருப்பினும் அந்தப்பிஞ்சு வேகமாய் நடந்தாள்.. ஸ்கூலுக்கு கிட்ட போய் போடுவம், அங்க தானே தேவ. அம்மம்மா பாவம். இப்ப சப்பாத்து தேவேல்ல.

## ஆர். விஜயலட்சுமி

# சமீரா



சமீரா அழகி, பிரம்மன் தன் திறமைகளை யெல்லாம் இவளுக்கே செலவளித்திருப்பானோ, என்னவோ, செந்தாழம் பூ நிறம், பிறை நெற்றியில் விழும் சுருள்முடி, பெரிய கண்கள், படபடக்கும் இமைகள், இயற்கை நிறத்தோடு ரோஜா வண்ண இதழ்கள்.

கல்லூரி விடுமுறையை கழிக்க தன் பாட்டி வீட்டிற்கு வந்திருந்த சமீரா, எதையோ பறிக்கொடுத்தது போலவே இருந்தாள். எனவே சமீராவின் பாட்டி பக்கத்து வீட்டு ராதாவை அழைத்து, அம்மா ராதா என் பேத்திக்கு பொழுதே போகல. நீ கோவில், சினிமா, கடைத்தெருன்னு எங்க போனாலும் இவளையும் அழைச்சிட்டு போம்மா... என்றதும் ராதாவுக்கு மகிழ்ச்சி. பள்ளிப்படிப்பு முடித்து கல்லூரியில் சேரக் காத்திருக்கும் ராதாவுக்கு விடுமுறையை தன்னை விட ஒன்றரை வருடம் மூத்த சமீராவுடன் கழிப்பதும், அவளது நட்பும் நன்றாகவே இருந்தது.

ஒரு வாரம் சமீராவுடன் ஷாப்பிங், மார்க்கெட், சினிமா என்று சுத்திக்கொண்டிருந்தாள் ராதா.

சமீராவின் அப்பா முஸ்லீம் மதத்தவராயினும், ஹிந்துவான சமீராவின் அம்மாவை காதலித்து மணந்தார். சமீராவுக்கு ஒரு தங்கை, ஒரு தம்பி. ராதாவுக்கு ஒரு அக்கா, ஒரு அண்ணன். ராதாவின் அண்ணன், அக்கா இருவரும் ஊர்த்திருவிழாவிற்காக வந்திருந்தனர். ராதாவை தேடி வந்த சமீரா ராஜ்குமாரை எதிர்பாராமல் சந்தித்தாள். அவனும் இவளைப் பார்த்து அதிர்ந்தான். ஏற்கனவே ஒரு முறை சென்னையில் ஒரு ரயில் பயணத்தில் ஒரு பையனோடு இவளை பார்த்திருக்கிறான். இவள் எங்கே இங்கு வந்தாள் என்றக் கேள்விக்குறியோடு நின்றிருந்தவனைப் பார்த்து, ராதா அண்ணா இவ பேரு சமீரா பக்கத்து வீட்டுக்கு லீவுக்கு வந்திருக்கா, மெடிக்கல் காலேஜ் பர்ஸ்ட் இயர். ஹாய், ஹலோவோடு முதல் சந்திப்பு முடிந்தது.

மறுநாள், டேய் ராஜ்குமாரு பொம்பள பிள்ளைங்க தனியா போவுதுங்க, திருவிழாக் கூட்டம் கூட, துணைக்குப் போப்பா என ராதாவின் அம்மா சொன்னதும் அவர்களோடு கிளம்பினான் கூடவே சமீராவும்.

சமீராவோட ரயில்ல பாத்தது யாரா இருக்கும்னு மண்டையில் குடைச்சல் ராஜ்குமாருக்கு. கேட்டுவிடலாமா. மிஸ் சமீரா... அன்னைக்கு யார் கூட டிராவல் பண்ணீங்க அவள் சற்றும் தயங்காமல் மை லவ்வர், பட் நாட் நௌ எனக் கூறக் கேட்டு அதிர்ந்தான்.


மறுநாள் மாடியில் எக்ஸர்சைசில் இருந்த போது சமீரா துணி காய வைக்க வந்தாள்.

இவன் கேட்காமலேயே அவளாக வந்து, நானும் அவனும் மூணு வருஷம் லவ் பண்ணோம். ஸ்கூல்ல கிளாஸ் மேட். 10 th +1, +2 மூன்றாண்டு காதல் இரண்டு வீட்டிற்கும் தெரியவர, மிகப்பெரிய சண்டையாக வலுத்து சமீராவின் அப்பாவை, அந்த பையனின் அப்பா அடித்துவிட தன் காதல் பிரேக் அப் ஆன விஷயத்தை மிகச் சாதாரணமாக சொன்னாள்.

அவளின் வெளிப்படையான பேச்சும், அவளது அழகும் ராஜ்குமாரை சலப்படுத்தியது. அவளும் இவனுடன் நட்பாக பழகவும், நட்பு காதலாக மாறியது.

பத்து நாட்கள் விடுமுறை முடித்து ராஜ்குமார் ஊருக்குச் செல்லும்போது, சமீராவை பிரிய மனமில்லாமல் சென்றான். அரசல், புரசலாக இவர்கள் காதலிப்பது ராதாவுக்கு தெரிய வர, தோழி அண்ணியாவதில் மகிழ்ச்சியாகவே இருந்தது.

இரண்டு மாத விடுமுறை முடித்து சமீரா மெடிக்கல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டினைத் தொடர, ராதா இன்சினியரிங் கல்லூரியில் முதலாம் ஆண்டில், ராஜ்குமார் வேலை மாறுதல் காரணமாக மூன்று பேரும் சென்னை நோக்கிஞ் ராதாவின் அக்கா தாம்பரத்தில் இருந்தபோதும் ராதா கல்லூரி விடுதியிலும், ராஜ்குமார் அறையில் நண்பர்களுடன் தங்கியிருக்க, ஞாயிறு அன்று அனைவரும் அக்கா வீட்டில் ஆஜர். சில சமயம் சமீராவும்.



ஆட்டம், பாட்டம், கலாட்டா, சினிமா என ஞாயிறு முழுவதும் கொண்டாட்டம்.

சமீராவின் தோழி ஒருமுறை ராஜ்குமாரின் போனை எடுக்க வேண்டியதாயிற்று. விபரம் அறிந்து ஏய் சமீரா, உனக்கு வெக்கமாயில்ல நம்ம ஸ்கூல்ல படிச்ச அபிய லவ் பண்ணிட்டு இப்போ இவன லவ் பண்ற...

போடி, அவனுக்கும் எனக்கும் பிரேக் அப் ஆயிடுச்சு, எங்க அப்பா என்னைக்கும் இதுக்கு ஒத்துக்க போறதில்ல. இதில என்னடி தப்பு. நான் எல்லா விஷயத்தையும் ராஜாக்கிட்ட சொல்லிட்டேன். அதுக்கு அப்புறம் தான் அவனே என்கிட்ட ப்ரப்போஸ் பண்ணான்.

என்னவோ எனக்கு இது சரியா படல சமீரா... மறுபடி அபி வந்து நிக்கப்போறான். அப்ப என்ன பண்ணுவ...

சமீரா கடைசி ஆண்டில். இருவர் வீட்டுக்குமே விஷயம் தெரிந்து சம்மதம் வரவே படிப்பு முடிவதற்காக அனைவரும் காத்திருந்த தருணத்தில் அபியிடமிருந்து ஒரு வீடியோ... ஒரு வாய்ஸ் மெசேஜ்.

மீரா... எங்க வீட்ல உனக்காக போராடி சம்மதம் வாங்கிட்டேன். உனக்காக பாய்ஸன் குடிச்சு ரொம்ப சீரியஸா நான் இருந்தப்போ கூட நீ என்ன பாக்க வரலஞ் இந்த வருஷத்தோட என் படிப்பும் முடிஞ்சது. எங்கப்பாவோட பிஸினஸ் எல்லாம் இனிமே நான் தான் பாக்கப் போறேன். உனக்காக அழகா ஒரு வீடும், க்ளீனிக்கெல்லாம் கூட கட்டப் போறேன் ரெண்டு கோடி புராஜக்ட்ல...

இதையெல்லாம் சொல்ல நானே நேர்ல வந்தேன். ஆனா விலாசினி நீ இன்னொரு பையனை லவ் பண்றதா சொல்றா... எப்படி உன்னால இதப்பண்ண முடிஞ்சுது. நீ மறுபடி என்னத்தேடி வராட்டி நான் அவனத்தேடி போவேன். அவன் உயிர் உனக்கு முக்கியம்னா எனக்கு போன் பண்ணு.

சமீரா பெரும் குழப்பத்தில்... சரி எதுக்கும் பேசி அவன்கிட்ட வீட்டு நிலமையை

சொல்வோம்னு வாட்ஸ் அபல சேட் பண்ண துவங்கினாள். தொடர்ந்தது. அவன் ஏதேதோ சொல்லி இவளை ப்ரெயின் வாஷ் செய்ய ஆரம்பித்தான்.

சமீராவிடமிருந்து இப்போதெல்லாம் போன் இல்லை. வாட்ஸ் ஆப் மெசேஜ் ஏதும் இல்லாமல் ராஜ்குமார் குழம்பினான். சரி படிப்பு சுமையே என்று நினைத்தாலும் நெட் ஆன்லைனிலே இருந்தது.

இவளுக்கு என்னாச்சு... என்று விலாசினியை தொடர்பு கொள்ள, உண்மை கேட்டு அதிர்ந்தான். கோபத்தின் உச்சிக்கே சென்றான். யார் கிட்ட பேசின உண்மைய சொல்லு என்று தினமும் அதட்டிக் கேட்டும் அம்மாட்ட பேசிட்டு இருந்தேன் என்று சொல்லி மழுப்பினாள்.

பிரச்சனை ராதாவின் காதுக்கு எட்ட ஏண்ணா இப்படி சந்தேக பேர் வழியா இருக்கஞ் அவ உன்கிட்ட இரண்டு வருஷமா உண்மையாதான இருந்தா. உன்ன நம்பி நம்ம அக்கா வீட்ல வந்து தங்கிக்கூட இருக்கா... மத்த ஆம்பளங்க மாதிரி மட்டமா நடந்துக்காத என்று கத்திவிட்டு போனை வைத்தாள்.

ராஜ்குமாரின் கோபமும், சந்தேகப்பட்டு பேசும் அவன் வார்த்தைகளும் சமீராவை சற்றே விலகியிருக்க வைத்தது. தனக்காக உயிரை விட துணிந்ததும் எல்லாவற்றிற்கும் மேலாக இவளுக்காக அவன் சொன்ன ரெண்டு கோடி பணமும் சமீராவை குழப்பமடையச் செய்தது.

சமீரா மற்றும் ராஜ்குமார் குடும்பம் மிடில் க்ளாஸ், வாடகை வீடு, ஆனால் அபிக்கோ ஏராளமான சொத்து அப்போதே அவன் காரில் தான் இவள் ஊர் சுற்றுவாள்.

விலாசினி எவ்வளவோ தடுத்தும் ராஜ்குமாருக்கு போன் செய்து சந்தேகப்புத்தி உள்ள உன்னோடு வாழ முடியாது. நான் அபி யைதான் கல்யாணம் பண்ணிக்குவேன். இனி என்கிட்ட பேச வேண்டாம் என்று போனை துண்டித்தாள்.

ராஜ்குமாருக்கு கோபம் தலைக்கேறியது. ஏற்கனவே முன் கோபம் ஜாஸ்தி. உலகத்தில் உள்ள ஒட்டு மொத்த பெண் குலத்தையும் திட்டித்தீர்த்தான். நண்பர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவ ஹாஸ்டலுக்கு போய் கன்னத்துல நாலு அறை, அறஞ் சாதாண்டா எம்மனது ஆறும்னு கத்தியவனை நண்பர்கள் தடுத்தனர்.

ரொம்ப ரொம்ப கஷ்டப்பட்டான். இரண்டாண்டுகளில் இரண்டாயிரம் செல்பிக்கள், பல சினிமாக்கள், இவளுடன் இரண்டு பெண் சகோதரிகள் பிறந்திருந்ததாலோ என்னவோ அவளை அப்படியே விட்டுவிட நினைத்தான்.

ராதா விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தாள். ராஜ்குமார், சமீரா, தன்னைவிட்டு விலகியதை வீட்டிற்கு சொல்லிவிட்டிருந்தான். அனைவருமே சமீரா மீது கடுங்கோபத்தில் இருந்தனர். ராதா மிகவும் கோபப்பட்டாள்.

நம்பிக்கை துரோகி, அவள் அழகானவள் நல்ல பிரண்ட் என்றெல்லாம் நினைத்ததற்கு மாறாக பணப்பிசாசாக இருப்பது ஏனோ தெரியாமல் போனது.

ராஜ்குமாரிடம் அவனை பிரிவதற்கான காரணமாக அவள் சொன்னது... உன்னோட சம்பளம் 20 ஆயிரம். ஆனால் நான் டாக்டரானா என்னோட வருமானம் மாசம் ஒரு லட்சத்துக்கும் மேல். அதில் உக்காந்து சாப்பிட உங்க குடும்பத்தோட திட்டம் போட்டீங்களா என்ன என்று கேட்டதிலிருந்து நொறுங்கிப் போனான்.

சாயந்தரம் கோயிலுக்கு போன ராதா, அலறிக்கொண்டு வந்தாள். அண்ணா, சமீரா வந்திருக்கா... அவ மூஞ்சில யாரோ ஆசிட் ஊத்திட்டாங்கலாம். அவங்க பாட்டி என்கிட்ட சொல்லி அழுதாங்க...

என்ன உலகயே மயக்கும் அழகு சிதைந்து விட்டதா... ராஜ்குமார் அதிர்ச்சி அடைந்தான்

சமீரா முகத்தில் ஆசிட் வீசியது யாராக இருக்கும்? விடை அடுத்த இதழில்... ■



# புத்தகம் வாழ்க்கையை மாற்றும்

- இசைவாசி

தரங்கம்பாடியில் முதன்முதலாய் அச்சுக்கூடத்தை நிறுவி மதக் கொள்கைகளை பரப்ப நினைத்த கிறித்துவர்களுக்கு முன்னோடியாய் தமிழகத்து புலவர்கள் ஓலைச்சுவடிகளைப் புத்தகமாகப் பயன்படுத்தினார்கள். ஓலைகளில் எழுத்தாணியைக் கொண்டு பொத்தல் போட்டு எழுதியதால்தான் பொத்தகம் என்றார்கள் முன்னோர்கள். நாளடைவில் பொத்தகம் புத்தகமாக மருவியது. ஓலைச்சுவடிகளில் ஒற்றெழுத்து எழுதாமல் எழுதப்பட்டது. காரணம் ஒற்று வைத்து எழுதும்போது நாளாக நாளாக விரிசல் ஏற்படும் என்பதற்காக ஒற்றெழுத்தை பயன்படுத்தாமல் ஓலைச்சுவடியைப் பாதுகாக்க நினைத்தவர்கள் நம்முடைய முன்னோடியான அறிவாளிகள்.

கரையான் அறித்து ஓலைச்சுவடி அழியாமல் இருக்க மஞ்சள் தூளால் பூசி பாதுகாக்கப்பட்டது. இன்னமும் நமது அலமாறியில் இருக்கும் புத்தகங்களைக் கரையானிடம் இருந்து பேண வேண்டுமென்றால் மஞ்சள் தூள் பூசி வையுங்கள்.

சிறுவர் சிறுமிகள் முதன் முதலில் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும்போது ஆசிரியரால் கொடுக்கப்படும் புத்தகங்களைப் பாதுகாக்க புது அட்டைகள் போட்டு வைப்பார்கள். லேபில் ஒட்டி அழகு பார்ப்பார்கள். புது புத்தகம் என்பதால் கையெழுத்தை நிதானமாக அழகுபடுத்தி எழுதுவார்கள்.

புது புத்தகத்தில் எழும் வாசனை உண்மையிலேயே இதயத்தைத் தொட்டு விடும். நல்ல உணர்வைத் தரும் வாசமாக அது இருப்பதை நுகர்ந்து பார்த்திருப்போம். எப்போது புத்தகம் வாங்கினாலும் புது மணத் தம்பதிபோலவே நாம் பாவித்து பத்திரப்படுத்தி வைப்போம். குழந்தைகள் கையை நீட்டி "மாமா எழுது மாமா" என்று சொல்லும் குழந்தைக்கும் நமக்குமான உறவு புதிதாக முளைப்பது நெகிழ்வான தருணமாகவே அமையும். அதைப்போலவே புத்தகத்தைக் கையில் எடுக்கும் போதெல்லாம் இருக்கும்.

நண்பர்களோடு மணிக்கணிக்கில் பேசும் போது ஏற்படாத வலிமை புத்தகத்தை தனியே அமர்ந்து வாசிக்கும்பேர்து கிடைக்கும் வலிமையானது துவண்டுபோன உள்ளத்தைக் கூட வலிமையேடு எழும் விதைகளாக மாற்றி விடுகிறது. இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுத்த ஒரு நாளைக்கான 24 மணி நேரத்தில் புத்தகம் வாசிப்புக்காகப் பயன்படுத்திய நேரங்கள்தான் பயனுள்ள நேரங்களாக இருக்கும்.

> பிரம்மனால் படைக்கப்படாத புத்தகங்கள்
> பிரம்மனாகவே இருந்து
> பல மனிதர்களைப்
> படைத்து விடுகிறது...

- இசைவாசி

"மெய்மைகொண்ட நூலையே அன்போடு வேதமென்று போற்றுவாய்" என்பது பாரதியின் வரிகள்.

புத்தகத்தை வாங்கி படிப்பதற்கு பண வசதி இல்லாதவர்கள் நூலகத்தைத் தேடி

# உலக நடை!

காடு காரை கழனி தோப்பு
காலத்திற்கும் சேர்த்த தொகை
வீடு முதல் அத்தனயும்
விருப்ப முடன் சீதனமாய்
நாடித்தன் மகளுக்குத் தந்து விட்டார்
நலமுடனே திருமணமும் முடித்துவிட்டார்!
ஒரு மகளே உறவானாள்
உணவளிக்கும் தாயானாள்
தருநிழலாம் மகள்வீட்டில்
தங்கிவிட்டார் அப்பாவும்!
பகல் பொழுது கூடத்தில்
படுத்திருந்தார் அப்போது
இகழ்வார்த்தை தனை உமிழ்ந்தாள்
இவருடைய சம்பந்தி!
'கொண்டான் கொடுத்தான்வீட்டில்
கூடாரம் போட்டாச்சா'
என்றுரைத்துச் சென்றுவிட்டாள் எமன்!
வண்டாக அவர் காதில்
வார்த்தைகள் துளைத்தெடுக்க
திண்டாடித் திணறி யவர்
திரும்பக்கண் விழிக்க வில்லை!
பல கொடுத்தும் பலன்கருதா
பாவிகளின் மத்தியிலே
உலக நடை கல்லாத
உத்தமரும் உயிர் துறந்தார்!
மகள் நினைவாய்த் துடித்திட்ட
மார்புக் கூட்டு இதயத்தை
அகழ்ந்து அழித்து விட்ட
அநியாயம் உணராமல்
மகள் வந்து எழுப்பினாள்
மதிய உணவுண்ண
புகழுடம்பு எய்திவிட்ட
புண்ணியவான் தந்தையை!

மரபுக்கவிஞர்
**அ. அப்துல் முத்தலிப்**

பிடித்து வாசித்துவிட்டு வருவார்கள். தவம் செய்யும்போது ஏற்படும் வலிமை அப்போது ஏற்படும். புத்தக வாசிப்பும் தவம்தான். வாசிக்க வாசிக்க சிந்தனையும் உள்ளமும் பலம் அடையும்.

தந்தை ஒரு குடிகாரன் தாயோ குழந்தை மேல் அக்கறை இல்லாதவள். இதனாலேயே அக்குழந்தை பள்ளிக் கூடம் போக விரும்பவில்லை. நூலகத்தில் புத்தகம் வாசிக்க கற்றுக் கொண்ட குழந்தை எதிர்காலத்தில் ஷேக்ஸ்பியர்க்கு இணையாக நாடகம் எழுத தொடங்கியது. ஷேக்ஸ்பியர் நாடகம் துன்பம் நிறைந்ததாக இருந்த தருணத்தில் இன்பம் தரும் நாடகமாக எழுதியதுதான் சிறப்பு.

ஷேக்ஸ்பியர்க்கு இணையான புகழ்ச்சியை அடைந்தது யார் என்றால் பெர்னாட்ஷாதான். அவருடைய அறையில் எப்போது பார்த்தாலும் காகிதங்களும் மூடி வைக்கப்படாத புத்தகங்களும் குப்பைகளாகவே காணப்படும். அதை எடுத்து வைக்கக்கூட நேரமில்லாமல் வாசிப்பார், எழுதுவார் பெர்னாட்ஷா. அப்பாவின் அன்பும் அம்மாவின் அரவணைப்பும் இல்லாமல் வாழ்ந்த பெர்னாட்ஷா புத்தகங்களோடு வாழ்ந்த காலங்கள்தான் அதிகம். அவரின் வாசிக்கும் திறன் அவரை வெற்றியோடு வசிக்க வைத்திருக்கிறது.

சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில், டால்ஸ்டாய், ரூசோ, பரமஹம்சர், விவேகானந்தர் போன்ற சான்றோர்களைப் போலவே புத்தங்கள் தத்துவம் பேசும். தத்துவம் பேச ஒரு தகுதி தேவை. தன் தவறுகளை உணர்ந்துகொண்ட அனைவரும் தத்துவம் பேச தகுதி உடையவர்களாகிறார்கள்.

தத்துவம் பேசுபவனைத் தத்துவஞானி என்கிறோம். புத்தகத்தை வாசித்து தன்னை பழுக்க செய்கிறவனை வாசிப்புஞானி என்று நிச்சயமாக சொல்ல வேண்டும். மரம் பூமியின் ஆற்றலை உறிஞ்சி வளமையோர்டு வளரும். மரத்தின் உயிர் சக்தியை உறிஞ்சினால் காய் கனியாகக் கனியும். புத்தகத்தை நம்முடைய மனம் உறிஞ்சினால் கனியாகப் பழுக்கும்.

எப்போதும் இரவு படுக்க சென்றாலும் ஒரு

புத்தகத்தைச் சிறுது நேரமாவது படித்து விட்டுத் தூங்குவது காமராஜரின் நல்ல பழக்கம். அது மட்டுமல்ல நாளேடுகளை அன்றாடம் படித்து அரசியல் கல்வியைக் கற்றுக் கொண்டார். பள்ளிக்கூடம் போகவில்லை என்றாலும் நிறைய பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படித்ததால்தான் படிக்காத மேதையாகக் காட்சியளித்தார் கர்மவீரர்.

“கைப்பொருள் கொடுத்தேனும் கற்றல்” சீவக சிந்தாமணி கூறும் இவ்வாக்கியம் புத்தகத்தை வாங்கி படியுங்கள் என்பதை அறிவுறுத்துவது போலவே தோன்றுகிறது.

பொது இடங்களில் நூலகங்களை ஏற்படுத்துங்கள் தானாகக் கற்றுக்கொள்வதே நல்ல கற்றலாகும் என்று இயற்கைவாதியான ரூசோ எடுத்துரைத்தார். பள்ளிக்கூடம் சரியாகப் போகாதவர். தந்தை கடிகாரம் பழுது பார்க்கும் தொழிலைச் செய்யும் சாதாரணத் தொழிலாளி.

ஏழ்மையாக வளரத் தொடங்கிய ரூசோ லண்டன் மியூசிக் நூலகத்திற்கு அடிக்கடி சென்று புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். அவர் தத்துவம் பேசவும் எழுதவும் காரணமாக இருந்தது லண்டன் மியூசிக் நூலகமாகத்தான் இருந்திருக்க முடியும்.

கடவுளுக்காக திருவிழா நடைபெறும். தனி மனிதனைப் போற்றி வணங்க குறிப்பிட்ட தினத்தைக் கொண்டாடுகிறோம். ஆனால் புத்தகத்திற்காக திருவிழா கொண்டாடுகிறோம் என்றால் புத்தகத்தின் மதிப்பு அவ்வளவு இன்றியமையாததாகும்.
எந்த ஒரு புத்தகம் நாட்டுப் பற்றை, சமுதாய உணர்வை, உறவுகளின் முக்கியத்துவத்தை, வாழ்க்கையின் நம்பிக்கையை உணர்த்துகிறதோ அதுவே வாழ்க்கையின் பயனுள்ள புத்தகம்.

சோவியத் ரஷ்யாவில் எல்லா நூலகங்களிலும் அரசு அலுவலகங்களிலும் லெனின் புகைப்படத்தை மாட்டி வைத்திருக்கிறார்கள். அதற்கு கீழே ஒரு வாசகம் “படியுங்கள் மேலும் மேலும் படியுங்கள்” என்றெழுதப் பட்டிருக்கிறது.

1914 ஆம் ஆண்டு முதல் உலகப் போர் நடந்தது. அதே ஆண்டில் காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவை நோக்கி இந்திய சுதந்திரத்திற்காக வரலாரானார். இதே ஆண்டில் லெனின் சோசலிச புரட்சி தொடங்கியது.

அப்போது நாட்டின் இதயமாக விளங்கும் இளைஞர்களுக்கு மத்தியில் லெனின் பேச வேண்டிய கட்டாய சூழலுக்குத் தள்ளப்பட்டார். நம் நாட்டில் இளைஞர்களை போராட்டத்திற்கும், போருக்கும் அழைத்தார்கள். ஆனால் லெனின் அவர்கள் தங்கள் நாட்டு இளைஞர்களை போருக்கு அழைக்கவில்லை. இளைஞர்களே நாட்டின் சுதந்திரத்தை முதியோர்களாகிய நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். உங்கள் இடத்தில் மூன்று கட்டளையிடப் போகிறேன். அதை நிறைவேற்றி தருகிறீர்களா? என்று சற்று விநாடி மௌனம் சாதித்தார். லெனினை மதித்த இளைஞர் கூட்டத்தில் குரல் எழுந்தது. அதென்ன மூன்று கட்டளை?

ஒன்று படியுங்கள். இரண்டு படியுங்கள். மூன்று படியுங்கள். இந்த நாட்டிற்கு நீங்கள் ஆற்றவேண்டிய கடமை இதை தவிர வேறெதுவுமில்லை என்றார்.

இன்னமும் மாணவர்களை உருவாக்குவதில் ஆர்வத்தை ரஷ்யா காட்டுகிறது என்றால் அது மிகையாகாது. அங்குள்ள பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் செயல்முறை கல்வியே முக்கியத்துவத்தை பெற்றிருக்கிறது. நம் நாட்டு மாணவர்களுக்கு ஏதேனும் அறிவுரை கூற வேண்டும் என்று தோன்றினால் படியுங்கள் என்பதாகவே இருக்கட்டும்.

“உழைப்பதை விடவும் படிப்பது கஷ்டம்” மாணவர்கள் சலித்துக் கொண்டே சொல்லும் வாசகம் இது. இருந்தாலும் படித்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் தேர்வுக்காகப் படிப்பார்கள். பாடப்புத்தகம் சம்பாதிக்க மட்டுமே உதவுமே தவிர தெளிவான அறிவைத் தராது. இலக்கியம், கவிதை, நாவல், தன்னம்பிக்கை, சிறுகதை போன்ற சமுதாயம் சார்ந்தும் படிக்கும் பழக்கம் ஒவ்வொரு மாணவனுக்கும் எழ வேண்டும். மாணவன் தினமும் படிக்கிறானோ் இல்லையோ

ஆசிரியர் படித்தாக வேண்டும். கலாம் அவர்கள் சொல்வார்கள் “நான் ஒரு மணி நேரம் வகுப்பு எடுக்க வேண்டுமென்றால் மூன்று மணி நேரம் வாசிக்க வேண்டி இருக்கிறது”.

கணினித்துவம் நவீனத்துவம் இயந்திரத்துவம் என்று மாறிவட்ட இக்காலத்தில் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டாலும் மின்னஞ்சல் இணையம் என்று பழக்கப்படுத்தி கொண்ட மாணவர்களுக்கு சமுதாய நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இப்போது பிறந்து விட்டது.

தொலைக்காட்சி கணினி இல்லாத காலத்தில் பத்திரிகையும் புத்தகத்தையும் ஓய்வு நோங்களில் படிப்பதே அக்கால மாணவா;களின் ஓய்வு நோமாகவும், நல்ல பழக்கமாகவும் இருந்தது.

உன்னை உணர வேண்டுமா புத்தகம் படி. நீ ஞானியாக வேண்டுமா புத்தகம் படி உன் வெற்றிகளைப் பிறா; வாழ்த்த வேண்டுமா புத்தகம் படி. உனது வாழ்க்கை அடுத்தவா;களுக்கு உதாரணமாக வேண்டுமா புத்தகம் படி.

> படி படி
> அதுவே உனக்கு
> வெற்றி படி...

- இசைவாசி.

பிரதம மந்திரியாக இருந்த நேரு அடிக்கடி “நேரமே போதவில்லை நேரமே போதவில்லை” என்று புலம்புவது வழக்கம்.

ஆனாலும், நிறைய மேற்கோள்கள் சொல்லி மேடைகளில் சிறப்பாகப் பேசுவது அவருடைய திறமை. இது எப்படி சாத்தியம் என்ற குழப்பத்தில் ஒருவர் நேருவைச் சந்தித்து நேரம் போதவில்லை என்கிறீர்கள். ஆனாலும், நிறைய எடுத்துக்காட்டுகளோடு நன்றாகப் பேசுகிறீர்கள் அது எப்படி? அதற்கு நேரு திருடுகிறேன் என்று பதில் சொன்னார். கேள்வி கேட்டவர்க்கு ஏன்டா கேள்வி கேட்டோம் என்றாகி விட்டது.

நேரு மீண்டும் சொல்ல ஆரம்பித்தார். பாதுகாவலர்கள் தூக்கத்திற்காக எனக்குக் கொடுத்த 5 மணி நேரத்தில் 2 மணி நேரத்தைப் புத்தகம் படிப்பதற்கு திருடுவேன் என்றார். கடவுள் கொடுத்த 86400 விநாடிகளில் கொஞ்ச நாழிகையாவதைத் திருடி அதை வாசிக்கப் பயன்படுத்துங்கள்.

> ஒருவனை
> எழ வைக்கும் கோல்
> எழுது கோல்...

- இசைவாசி

எழுத்துகள் எழுச்சிகளைத் தந்துவிடும். என்னுடைய 21 ஆவது வயதில் “வெற்றிகள் விற்பனைக்கு” அல்ல என்னும் என் ஆசிரியர் எழுதிய புத்தகத்தை முழுமையாகப் படித்தேன். அதன் பிறகு புத்தகம் வாசிக்கும் பழக்கம் அதிகமாக ஏற்பட்டது என்று சொல்ல எனக்குத் தயக்கம் இல்லை.

தொலைபேசியில் பேசினாலும் நேரில் சந்தித்து உரையாடினாலும் என் குருநாதர் என்னிடத்தில் சொல்வது இதுதான் “படிக்கனும் டா தம்பி நிறய படிக்கனும”. ஆசிரியராக நான் இருப்பதால் ஒருநாள் படிக்காமல் போனாலும் அன்றைய தினம் வகுப்பு மந்தமாக போகும். வாசித்தல் எனக்காக மட்டுமில்லாமல் நாளைய சமூகத்தின் சீர்த்திருத்தவாதிகளான மாணவர்களுக்காவும் இருக்கும்.

ஒரு சிலர் புத்தகத்தை இரவலாக கேட்டவர்களுக்குக் கொடுக்கத் தயக்கப்பட்டு யோசித்து தருவார்கள். ஏன் தெரியுமா? மீண்டும் புத்தகத்தைப் பெறுவதற்குள் ஒரு பெரிய போரில் இருந்து மீளுவது போலவே அவர்களுக்கு இருக்கும் அதனால்தான். புத்தகத்தை வாங்கியவர் திருப்பி தர மறந்து விடுவார். புத்தகம் கையில் வரும்வரை அதை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும் அவர்களின் மனம்.

காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் கண்ணதாசனைப் பற்றிய வாழ்க்கை குறிப்புகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதில் கண்ணதாசன் கைப்பட எழுதிய ஒரு குறிப்பு நம்மை வியக்க வைத்து விடும்.

"இது என்னுடைய புத்தகம் யாரும் இரவல் கேட்காதீர்கள்".

பணத்தைக்கூட கடனாகக் கேளுங்கள் புத்தகத்தைத் தயவுசெய்து கேட்காதீர்கள் என்று சொல்வது போலவே அந்த வாக்கியத்தை படித்தவுடன் நமக்குத; தோன்றும்.

பயன்படுத்தாத புத்தகத்தில் பூச்சிகள் வாழும். புத்தகத்தைப் பயன்படுத்துபவன் புத்தக பூச்சாகவே வாழ்கிறான். புத்தகப் புழு என்று பிறரால் இகழப்பட்டால் கவலைப்படாதீர்கள். புழுக்கள்தான் பட்டாம் பூச்சிகளாக மாறும்.

கி. வீரமணி ஐயா அவர்கள் மதுரை இரயில் சந்திப்பில் சொற்பொழிவு ஆற்றிவிட்டு இரயிலுக்குக் காத்திருந்தார். எழுத்தாளன் தன்னுடைய புத்தகத்தின் நல்ல விமர்சனம் கிடைக்கும் போது புதிதாக மீண்டும் பிரசவிக்கிறான். தி.க தொண்டர்ஒருவர் தான் வெளியிட்ட "அடுத்த ஆயிரம் நாட்கள்", "கோபத்தோடு கொஞ்ச நேரம்" என்ற இரண்டு புத்தகத்தின் பிரதியை ஐயாவை சந்தித்து கொடுத்து விமர்சனம் கேட்டார். இரயிலில் ஏறிய ஐயாவிற்கோ மிகுந்த பசி. உணவருந்த எண்ணுகையில் அப்புத்தகங்கள் அவர் கண்களில் பட்டன. சிறிய புத்தகம் என்பதால் சிறிது நேரத்திலே படித்து முடித்து விட்டார். அதன் பிறகே சாப்பிட சென்றேன் என்று தனது வாழ்வியல் சிந்தனையில் ஐயா அவர்கள் கூறி இருக்கிறார். புத்தக வாசிப்பு வெற்றிக்கான அர்ச்சனையாகும். அர்ச்சனை செய்யுங்கள் வெற்றி காட்சியளிக்கும்.

"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" நீரின் அளவைப் பொறுத்து ஆம்பல் மலரின் வளர்ச்சி இருக்கும். அது போல கற்கும் நூல்களின் அளவுதான் நமக்கு அறிவு இருக்கும் என்று சொல்கிறாள் முப்பாட்டி ஔவை.

> தத்துவஞானியாக வேண்டுமெனில்
> வாசிப்புஞானியாக நீ
> மாற வேண்டும்...



# சினிமாக்காரன்!



நௌஷாத் கான். லி
அபுதாபி

நீ வேஸ்ட்டு டா. இனிமே உன்னாலே எதுவுமே முடியாதுடா.நீயெல்லாம் ஏண்டா இந்த துறைக்கு வந்த ? படம் தோல்வி அடைந்த விரக்தியில் தயாரிப்பாளர் சதீஷ் இயக்குனர் பிரதீப்பை கண்டபடி திட்டினார். கோபத்தில் கன்னத்தில் ரெண்டு அரை வேறு விட்டார். அதையும் அந்த புது இயக்குனர் வாங்கி கொண்டான் ...

சதையை நம்பி படம் எடுக்க கோடம்பாக்கத்தில் பல பேர் உண்டு. ஆனால் கதையை நம்பி படம் எடுக்க ஒரு சிலரே உண்டு. தயாரிப்பாளர் சதீஷ் பிரதீப்பை நம்பி ஒரு சில கோடியை அவன் படத்திற்க்காக முதலீடு செய்தார். கதை நன்றாக இருந்தும் திரைக்கதை மெதுவாகவும் கொஞ்சம் மெலோடி ட்ராமாவாக இருந்ததால் மக்கள் அந்த படத்தை விரும்ப வில்லை. இதே படம் கேரளாவில் எடுத்திருந்தால் படமும் ஹிட்டு. பல அவார்டும் கிடைச்சு இருக்கும். பிரதீப்போட கெட்ட நேரம் தமிழ் மக்கள் டேஸ்ட் தெரியாம படத்தை எடுத்து தோத்துப்புட்டான்.

சில மாதங்களுக்கு பிறகு...

பிரதீப் தோல்வி தந்த விரக்தியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டு வந்தான். தனக்கு நல்ல காலம் வரும் போது தன்னால் நஷ்டம் அடைந்த தயாரிப்பாளர் சதீஷுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணினான்.

இதுவரை தமிழ் சினிமாவில் யாரும் தொடாத கதையை படமாக்க விரும்பினான். தோல்வியை சந்தித்தவனுக்கு யாரும் வாய்ப்பளிக்க மாட்டார்கள். அதனால் தன் லட்சிய திரைக்காவியத்தை படமாக்க தன் சொத்துக்களை எல்லாம் விற்றான். பக்காவாக பிளான் செய்தான். என்ன என்ன செய்ய வேண்டும் என்னென்ன செய்ய கூடாது என்பதை முன் கூட்டியே திட்டமிட்டான்.

நெட்டில் எங்கோ படித்த ஞாபகம் மியான்மர் (பர்மா) இல் வாழும் "சின்" மக்களின் வாழ்வியல் மிகவும் விசித்திரமானது அதனால், அதனை படமாக்க எண்ணினான்.

அதனால் தன் தொழில் நுட்ப குழுவோடு மியான்மர் சென்றான். 1960 க்கு முன் மியான்மரில் பெண்ணடிமை தனம் மிகவும் கோரத்தாண்டவம் ஆடியது. பழங்குடி பெண்கள் 12 14 வயதை நெருங்கும் போது அல்லது பருவ வயதை அடையும் போது அந்த மண்ணின் கலாச்சாரமாய் ஆணாதிக்கத்தின் திமிராய் அந்த பெண்களுக்கு உடல் முழுதும் பச்சை குத்தப் படும் முகம் உட்பட. இப்படி செய்வதால் அந்த பெண்கள் கற்பு நெறி தவறாமல் இருப்பார்கள் என்பது அந்த மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

அந்த மண்ணை அப்போது ஆண்ட மன்னர்கள் சில அழகான பெண்களை வல்லுறவு கொண்டு அவர்களை அடிமைகளாகவும் வைத்திருந்தனர். காலம் முழுதும் அவர்களது காலடியில் அடிமையாய் வாழ பச்சை குத்தும் முறையை அவர்களது மதச் சடங்காய் மாற்றி விட்டனர். காலங்காலமாய் பெண்களை கொத்தடிமையாய் வைத்திருந்த இந்த முறையை 1960 ஆம் ஆண்டு அந்த அரசு தடை செய்தது. இன்றும் போக்குவரத்து வசதி அவ்வளவாக இல்லாத மியான்மர் மலை பிரதேசங்களில் வயது முதிர்ந்த சில மூதாட்டிகளை பச்சை குத்திய முகத்துடன் காணலாம். சில ஆண்டுகளுக்கு முன் அந்த மக்களை காணலாம், பேட்டி எடுக்கலாம் அவர்களின் வாழ்வியலை வெளி உலகத்துக்கு சொல்லலாம் என அரசு அறிவித்த அறிவிப்பின் மூலமே பிரதீப் அந்த மலைப்பிரதேசத்துக்கு வான் வழியாய் கடல் கடந்து சென்றான். அதிகமான உழைப்பின் தேடல் நிச்சயம் பலனை கொடுக்கும். அங்கு 95 வயதை கடந்த முகத்தில் பச்சை குத்திய தழும்போடு வாழ்ந்த அனார் பாட்டியின் உதவியோடு உணர்வு பூர்வமாய் அந்த காலத்து மக்களின் வாழ்வியலை அந்த மக்களை கொண்டே தத்ரூபமாய் படம் பிடித்தான்.

படத்தை சிறப்பாய் எடுத்து விட்டு உலக விருதுகளுக்குரிய எல்லா போட்டிகளுக்கும் அனுப்பி வைத்தான். எல்லா மொழியிலும் டப் செய்தும் அந்த படம் வெளியிடப்பட்டது. உலகத்தின் அங்கீகாரமாய் அந்த படத்துக்கு ஆஸ்கார் விருதும் கிடைத்தது. உணர்வு பூர்வமாய் இருந்ததால் பட்டி தொட்டியெல்லாம் அந்த படம் சக்கை போடு போட்டது. பிரதீப் அந்த படத்தினால் நிறைய லாபம் சம்பாதித்தான். தன்னால் நஷ்டமடைந்த தயாரிப்பாளர் சதீஷிடம் கோடிக்கணக்கில் பணத்தை கொடுத்தான். உங்களை மாதிரி கதையை நம்பி படம் தயாரிக்கிற நல்ல தயாரிப்பாளர் நல்லா இருக்கணும் சார். இந்த பணத்தை வச்சு என்னை மாதிரி நல்ல கதையோட வர்ற பசங்களுக்கு உதவி பண்ணுங்க சார். உங்களுக்கு முன்னாடி நஷ்டத்தை தெரியாம கொடுத்ததுக்கு சாரி சார் என்றான்.

நான் தான்ப்பா உன்கிட்ட மன்னிப்பு கேட்கணும். ஒரு நல்ல சினிமாக் காரனை அசிங்கப் படுத்தி அடிச்சததுக்கு என்னை மன்னிச்சிடுப்பா என அவனை கட்டி தழுவி மன்னிப்பு கேட்டார் தயாரிப்பாளர் சதீஷ்.

சில நேரங்களில் நல்ல படைப்பும் தோல்வியடையலாம் ஆனால் ஒரு நல்ல சினிமாக்காரனின் தேடலும் உழைப்பும் ஓய்ந்து போக கூடாது.

நட்பம் சோலைவனம்

# எழுகின்ற விடியல்

எழுகின்ற விடியலிலே இனிமை வேண்டும்
ஏரியிலே தூயதண்ணீர் ஓட வேண்டும்
உழுகின்ற நிலத்தினையும் காக்க வேண்டும்
உணவினிலே விடங்கலக்கா தர்மம் வேண்டும்
இழுக்கல்ல போராட்டம் தெளிதல் வேண்டும்
. இகல்வெல்ல ஒன்றிணைந்தே முயல வேண்டும்
விழுகின்ற தலைமுறையும் வாழ வேண்டும்
விடியலிலே புதுதேசம் மலர வேண்டும்

சொந்தத்தில் அறிவுடைமை வளர வேண்டும்
சோற்றுக்கோ பஞ்சநிலை மாற்ற வேண்டும்
சொந்தங்கள் தமிழ்மக்கள் எண்ணம் வேண்டும்
சோர்வின்றி இனங்காக்க துடிக்க வேண்டும்
வந்தேறிக் கூட்டங்கள் ஓட வேண்டும்
வக்கற்ற ஆட்சியினை மாற்ற வேண்டும்
குத்தகங்கள் செய்வோரை களைதல் வேண்டும்
கூத்தாடிக் கூட்டங்கள் மாய வேண்டும்.

அறிவிழந்த மனிதரென்றே எண்ணித் தந்த
அத்தனையும் இலவசமாம் என்ன சொல்ல
தறிகெட்ட ஆட்சியிலே சுருட்ட எல்லாம்
தம்மக்கட் பணமென்ற எண்ண மின்றி
முறிக்கின்றார் நம்கழுத்தை உயிரைக் கொன்றே
முயன்றிடுவோம் மாற்றத்தை செய்ய நன்றே
தெறிக்கின்ற கனலாகும் நம்மில் கோவம்
திக்கெட்டும் வாழ்ந்திடுவோம் சிறந்தே நாளும்.

கவிஞர். கு. நா. கவின்முருகு

## வாழிய செந்தமிழ் வாழி...
## வாழியவே...

குறள் தந்த வள்ளுவனும்
காப்பியம் கண்ட கம்பனும்
சங்கம் வைத்து தமிழ் வளர்த்த
எண்ணற்ற புலவர்களும்
எடுத்தியம்பி வளர்த்த தமிழ்
எல்லைகள் பல கடந்து
உலகமேவிய உன்னத தமிழ்
கரைகாண இயலாத காவியம்
தன்னகத்தே கொண்ட தமிழ்
தரணியாண்ட வேந்தர் பலர்
சங்கடங்கள் தீர்த்த தமிழ்
மண்ணுலகில் தோன்றிட்ட பல
மொழிகளினில் மூத்த தமிழ்
இயல்.. இசை..நாடகமென
தன்னினம் வளர்த்த தமிழ்
உலகினிலே பெரும் மொழியாய்
வேரூன்றி வளர்ந்த தமிழ்
என்றும் சிறப்பான பேச்சு இனிமை
கொண்ட தமிழ்_ நீ
வாழி..வாழியவே...!!

*- அனுராஜ்*

## நட்பு

*தாய்மடியின் முதல் சுவாசமே*
*தரகாய் அமைந்த வாழ்விலே*
*வீதி வெளியே சுகமாய்*
*தோள் பற்றிடும் நட்பு...*


*தூரத்தில் எல்லாம் நல்லவையே*
*துரத்திடும் காலமும் நல்லதுவே*
*துவண்ட நாட்களே சாட்சியே*
*சாதனை கூடாரமே நட்பே...*

*முற்றத்து அலங்காரம் உறவாகியதே*
*உள்ளூறும் புல்லுருவியாய் அரிக்கிறதே*
*அவைகளுக்கே விடை சொல்லும்*
*வீழா நிழலாய் நட்பே....!*

*எதிர்கால திட்டமிடுதலே ஆறறிவே*
*எதிர்காலத்தை கண்ணில் தருவதே*
*ஏழாம் அறிவான நட்பே.. !*

*நல்லது எண்ணி நலமோடு*
*நட்பு கொண்டே நாமும்*
*அல்லது நீங்கி சுகம்பெறுவோம்....!*

**- அண்ணா ராஜேஸ்**



---

**இரை தேடிய குருவி**
**மீண்டும் தேடுகிறது**
**குஞ்சுகளின் சந்தோசம்!**

- பொன்மணி தாசன்

**இரை தேடிக் கொடுத்தும்**
**துடியாய்த் துடிக்கிறது**
**குஞ்சுகளின் வாயில் புழு!**

- சோழா முருகேசன்

**தேடிக்கொடுத்தபோதும்**
**தொலைந்து போகிறது**
**பசி!**

- சிவதர்சினி ராகவன்

**உணவு ஊட்டும் பறவை**
**பார்த்ததும் ஏங்கினான**
**அனாதை சிறுவன்!**

- கோயம்பத்தூர் ஜீவா

**உணவு கிடைத்தும் உண்ணாமல்**
**வாரிசுகளுக்காய் வழங்கப்படுகிறது**
**பரம்பரைச் சொத்துக்கள்!**

- அப்துல் ஹக்கீம்

**அக்கினிச் சுவாலையின்**
**அரவணைப்பில் இரும்பு**
**கத்திகளின் பிரசவம்.**

- கவி நுட்பம்

# மனங்கள் மாறினால்...

என்கல்வி என்னுடனே
அடுத்தவர்க்குத் தேவையில்லை
நான்மட்டும் நலமுடனே
நானிலத்தில் வாழ்ந்திட்டால்
போதுமென்று நினைப்பவர்க்கு
மனதினிலே நல்லெண்ணம்
இருப்பதாகக் காணவில்லை

கல்வியற்ற பிள்ளைகளும்
கற்றிட்டால் எதிர்காலம்
சிறப்போங்கி மிளிருகின்ற
தன்மையினைக் கொணர்ந்திடவே
தூய்மையாகச் சிந்திக்கும்
மனங்களையும் காணவில்லை...

சமூகமதன் நடுவினிலே
சுழன்றுவரும் இடர்களையும்
நீக்குதலே நன்றென்று
நலமுடனே இயங்குகின்ற
எண்ணங்கள் தோன்றிவிடின்
மாறாமல் நின்றிருக்கும்
இரக்கமற்ற மனங்களெல்லாம்
மாற்றங்களைக் கண்டுவிடும்...

நல்லவற்றைச் செய்திடவே
மனங்களெல்லாம் மாறிவிட்டால்
நமக்குள்ளே பிரச்சினைகள்
தீருகின்ற நிலைதனுக்கே
வழிகளையும் கண்டுவிடும்..

- கலா வர்ணன்
எஸ்.எஸ்.எம்.றபீக்



## படத்துக்கான குறும்பா

*1.*

என்னவளோ எழிலான ரம்பா
என்றுமவள் கண்ணாடி முன்பா
நின்றங்கு நிசம்கலைக்க
நெருங்கினேன் நகலானாள்
இன்றறிந்தேன் இவளழகோ கும்பா

- வில்லூரான்

*2.*

மரபு

புகைப்படத்தில் சிரிக்கின்றார் வாரீர் !
புன்னகையாய் நடிக்கின்றார் பாரீர் !
புதுமோகம் தீர்ந்திடுமா !
புத்துலகும் வந்திடுமா !
புதுமைகளைப் படைத்திடலாம் கேளீர் !!!

- பைந்தமிழ்ப் பாமணி.
சரஸ்வதி பாஸ்கரன்

*3.*

எண்ணமதில் அவர்பெரிய நினைப்பு
கண்டபடி படமெடுக்கும் கிறுக்கு
இன்றுஒரு எடுப்பெடுத்து
நன்றுஎன படமெடுக்க
வண்ணமென வந்ததொரு குரங்கு

- அபூ முஜாஹித்



# மெழுகுவர்த்தி

**- ஹேமலதா**

ஏங்க நான் ஒண்ணு சொன்னா கொவிக்காமே கேக்கறீங்களா...

கொவிக்கும்படியா நீ கேக்காமே இருந்தால் நான் ஏன் கொவிக்கறேன்?

எப்பவும் இப்படித்தான் எடக்கு முடக்கா பேசறது. நான்தான் எல்லா தப்பும் செய்யற மாதிரி.

சரி சரி விசயத்துக்கு வா. என்ன ரம்ஜானுக்கு துணி மணி ஏதும் விட்டுப்போச்சா?

அம்மாக்கு உடம்பு பழைய மாதிரி சரி ஆயிடிச்சாம் நாம இங்கே கூட்டிட்டு வரலாமா

ஏது மாமியா மேல ரொம்ப பாசம் வடியுது?

கோவில்லே அத்தேயே ராணி பார்த்திருக்கா. அவங்களும் பேரப்பசங்களே பத்தி விசாரிச்சாங்கலாம்.

அம்மாவை வீட்டை விட்டு துரத்திட்டோம். அவங்க போர வரவங்க கிட்டே தானே நம்ம பத்தி விசாரிப்பாங்க

நான் தான் துரத்தினா மாதிரி பேசறீங்க?

அம்மா தாயே நீ என்ன ஆட்டம் அடினே. அவங்களே அதே பாத்து தங்கச்சி வீட்டுக்கு போயிட்டாங்க.

அது சரி அவங்க சீக்கா படுத்தபோது நான் அவங்களே பாப்பேனா வேலைக்கு போய் சம்பாதிப்பேனா?

அவங்க என்ன படுக்கையா வா கிடந்தாங்க கொஞ்சம் முடியல்லே. வேளா வெளைக்கி சாப்பிட கூட விடலே நீ. அதோட வெளி வேலைக்கும் அனுப்பினே. பள்ளிக்கூடத்திலேர்ந்து வரும் போது சைக்கிள் காரன் இடிச்சி விழுந்துட்டாங்க. கால்லே அடி. ஒரு வாரம் கொஞ்சம் உனக்கு உதவ முடியல்லே. அதுக்குள்ளே என்ன வெல்லாம் பேசி பாடாப் படுத்தினே...?

இல்லேங்க. செலவு ரோம்ப ஜாஸ்தி ஆவுது. ஆஸ்ப்பத்திரிக்கு கூட்டிப்போக எனக்கு லீவ் கிடைக்கலே. உங்களாலே முடிஞ்சதா நீங்க பாத்திருக்க வேண்டியது தானே...

எங்கே தினோ வீட்டுக்கு வந்தா ஒங்க பிரச்சனே அதுதான் அவங்க போரைய்ன்னு சொன்னதும், வாய மூடிக்கிட்டிருந்தேன். இப்போ எதுக்கு?

இல்லே அவங்க இருந்தா எனக்கு ஒத்தாசையா இருக்கும்.

ஏன் பிரியாணி ஆக்கவா? தம்மு கட்டி பிரியாணி குண்டான் அடுப்புலே ஏத்தினா நாலு வீட்டுக்கு மணக்குமே! நீ எங்கே அது மாதிரி செய்யறே குக்கர்லே இல்லே வக்கறே...

ஆமா, உங்க அம்மா சாப்பாடு தான் வேணுமாக்கும். நாங்க வச்ச சட்டி குஸ்கா வையும் நீங்க தான் காலி பண்றீங்க.

அடியே நோம்புலே இருக்கறேன் எதுவும் தொடாதில்லே

அதில்லேங்க. செலவு கைய கடிக்கிது புள்ளங்களையும் பாக்க இப்போ ஆட்டோ கிரச் அது இதுன்னு செலவு.

வேலைக்கு தான் ஆளு போட்டிருக்கு. துணி தோய்க்க மிஷினே வாங்கிட்டோம். அப்புறமென்ன அம்மா இருக்கற வரை இதேல்லாம் அவங்க பாத்தாங்க. நீ பாக்கனும்னா கஷ்ட்டமா?

எங்கே வேலைக்காரி பாதி நாள் வர தில்லே. எல்லாம் நானே செய்யணும்.

அம்மா ஓடா தேஞ்சது இப்போ தெரியுதா?

அதுமட்டுமில்லீங்க பணம் எக்கச்சக்கமா செலவு ஆவுதுன்னு பார்க்கறேன்.

எல்லாரும் மின்சாரம் போனாத்தான் மெழுகுவர்த்தியை தேடு வாங்க. மத்த நேரம் மெழுகுவர்த்தியின் அவசியமில்லை.

அவங்க மெழுகுவர்த்தி மாதிரி ஊருகினாங்க. வாப்பா மௌத் ஆனதுக்கப்புறம் வெளீலே கூட போரதில்லே அவங்க.

அம்மாவை நாம சரியா கவனிக்கலே. இப்போ நமக்கு வேணும்ன்னா அவங்க தேவை அப்படித்தானே...

நான் எனக்காக கேக்கலே ரண்டு பேருக்கும்தான்.

வேண்டாம்மா ஒரு தரம் உன் பேச்சே கேட்டு நான் செஞ்ச தப்பு போதும். அவங்க அங்கே சௌக்கியமா இருக்காங்க அவங்களை தொந்தரவு செய்ய வேண்டாம்.

ஏங்க உங்களுக்கு உங்க அம்மாவை பாக்கணும்னு இல்லையா?

ஏன் இல்லே நான் ரெண்டு நாளுக்கு ஒரு தரை போய் பார்க்கிறேன். நானும் குழந்தைகளையும் அப்போப்ப கூட்டிட்டு போய் காட்டறேன். அவங்க அங்கேயே நிம்மதியா இருக்கட்டும். ■

# புலம்பல்!

செம்பில் பூசிய தங்க
முலாம், வம்பைத்தேடி
அலைகிறதாம்!

கம்பில் எரியும் தீப்பந்தம்
கற்பூரம் தானென
புகல்கிறதாம்!

கொம்புள்ளதெல்லாம்.
காளையா?
வம்புள்ளதெல்லாம்.
வீரமா?

கனிவு அதை அறியா
கருவிழி மூடிய
கருங்கடல் பள்ளங்கள்..

பரிவுற பழகும்
பசிபிக் கடலென
பாச வேசம் போடுகிறது!

இருப்பதுதானே
அகப்பையில் வரும்?
சிறப்பு அது என்றா
சிரித்து மகிழ்வர்!?

தமிழ்மாறன்

# இந்த இரவு எப்படி முடியப்போகிறதோ

ஒரு புறாவோ
ஒரு சிட்டுக்குருவியோ
ஒரு மைனாவோ
இவ்வழி வரவேண்டுமென்று
காத்துக்கிடந்தேன்
கடைசியில் நீ வந்தாய்
நினைவுகளாய்

ஒரு செம்பருத்தி மொட்டோ
ஒரு செவ்வரளி மொட்டோ
ஒரு பிச்சிப்பூ மொட்டோ
திறக்குமென்று விழித்துக்கிடந்தேன்
கடைசியில் மனது திறந்து கொண்டது

இந்த நிலா இன்றிரவு
என்ன கொட்டப்போகிறதோ என
பயந்து கிடந்தேன்
கடைசியில் ஒரே ஒரு
பார்வை மட்டும் பார்த்துவிட்டு
அது போய்விட்டது

இந்த இரவு எப்படி முடியப்போகிறதோ என்று
துடித்துக்கிடந்தேன்
கடைசியில் அதுவும் முடிந்து விட்டது
சத்தமேயில்லாமல்
நம் காதலைப்போலவே...

தங்கேஸ்